MAY 52

கண்ணன்

குழந்தைகளின் பத்

9 AUG 1952
MADRAS

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்காக என்று திட்டமிட்டு நல்ல வாரஸ்யமான கதைகளாகப் பொறுக்கிச் சேர்த்துச் சில புத்தகங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்தப் புத்தகங்களில் நிறையப் படங்களும் இருக்கின்றன. உங்கள் மனத்தைக் கவரும் கதைகள்; படங்கள்.

இப்போது தயாராக இருக்கும் புஸ்தகங்கள்:

ராஜாவும் குருவியும் "சோமசன்மா" அண

ரராஜாவும் குருவியும், ஆமையும் முயலும், காளையும் நாயும், நாயும் நிழலும், பிராம் மணனும் பொன் காப்பும், நரியும் திராட்சையும், சுண்டெலியும் சிங்கமும் என்ற ஏழு கதைகளின் தொகுதி.

இதே பெயரில் நீங்கள் படித்திருக்கும் பழைய கதைகளல்ல இவைகள். படித் துப் பாருங்கள்.

2\. **கழுகும் கிளியும்** "சோமசன்மா" அண 8

கழுகும் கிளியும், ஏமாறுத காக்காய், நண்டும் கொக்கும், புலித்தோல் போர்த்த கழுதை, குரங்கும் ஆப்பும், காக்கையின் தாகம், கழுதையும் நாயும் என்ற ஏழு புதுக் கதைகளின் தொகுதி.

3\. **தவளையும் காளையும்** "சோமசன்மா" அண 8

தவளையும் காளையும், நாவல் மரத்துக் குரங்கு, கூடா நட்பு, ஓநாயும் ஆட்டுக் குட்டியும், குரங்கு நியாயம் என்ற ஐந்து புதிய கதைகள்.

4\. **கோழி விதைத்த நெல்** "சூடாமணி" அண

பாட்டாகப் பாடும் கதை.

5\. **தங்கத்தின் பந்து** "சூடாமணி" அ

தங்கத்தின் பந்து, சண்டை போட்ட நாய்க்குட்டிகள், காட்டுப்பூனையும் குழந்தையும் என்ற மூன்று கதைகள்.

ன் பேர் என்ன? "சூடாமணி"

பாட்டுக்கதை.

12½%

211783
9 AUG 1952

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்: 5

குழந்தைகளே ! பக்கம் .. 2
ஜம்பு - 'ஆர்வி' 3
குளிகைத் தீவு - சித்திரக்கதை .. 9
கிரிக்கெட் ஜுரம் - என். எஸ். ஸ்ரீ. .. 13
பொழுது போக்கு - ஆர். மணி .. 17
என்ன வேண்டும்? - அழ. வள்ளியப்பா .. 18
ஸ்நான விளையாட்டு - எஸ். வி. ஆர். .. 20
நினைத்ததும் நடந்ததும் - குகப்ரியை .. 21
பாலுவின் யோசனை - எ. எஸ். ராகவன் .. 24
எழுது, அனுப்பு - பி. என். குமார் .. 29
எண்ணிலே படங்கள் - 'மூட்டை' .. 30
விசித்திரக் குள்ளன் - விஜயா .. 31
திருட்டு நாடகம் - மணியன் .. 37
பலசாலி - ஈசாப் கதை .. 40
கண்ணன் கழக அங்கத்தினர்கள் .. 41
வெளவால் - பி. நாராயணன் .. 43
மைக்ராஸ்கோப்-புரொபஸர் விஞ்ஞானம் .. 45
நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர் .. 49
கேட்டீர்களா ! .. 52
கண்ணன் தபால் .. 53

வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், மஞ்சரி, கண்ணன்
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

நீங்கள் எல்லாரும் பரீட்சை முடிந்து ஜம்மென்று பற்பல ஊர்களுக்குப் போயிருக்கிறீர்கள். பல புதிய நண்பர்களையும் முகங்களையும் பார்த்துப் பழகுகிறீர்கள். பல புதிய காட்சிகளைக் கண்டு களிக்கிறீர்கள்; பொழுது போக்குகிறீர்கள். உங்களையெல்லாம் பற்றி நினைக்கும்போது எனக்கு ரொம்பப் பொறாமையாகக்கூட இருக்கிறது. நான் மட்டும் இந்தப் பொசுக்கும் சென்னைப்பட்டின வெயிலில் உட்கார்ந்திருக்கிறேன். உங்கள் விடுமுறைக்குத் தகுந்த விஷயங்களாகத் தேர்ந்தெடுத்துக் கண்ணனில் வெளியிடவேண்டுமே என்று மண்டையை உடைத்துக்கொண்டிருக்கிறேன்! நீங்கள் குஷியாக எழுதித் தள்ளுபவற்றையெல்லாம் குனிந்து படித்துக்கொண்டிருக்கிறேன்.

ஆனால் ஒரு விதத்தில் எனக்கு வெகு சந்தோஷமாய் இருக்கிறது. நீங்கள் எந்த டில்லியில் இருந்தாலும் எந்தப் பட்டிக்காட்டில் இருந்தாலும் கண்ணன் உங்களைத் தேடிவந்து உங்கள் இருதயத்தில் மகிழ்ச்சியை ஊட்டத் தவறமாட்டான். உங்களுடன் உறவாடிக் களிக்கத் தவறமாட்டான். இதைவிட வேறென்ன வேண்டும்?

கண்ணன் இப்போது இருப்பது போலவே இருக்கலாமா அல்லது மாதம் இரு முறையாக இரண்டணா, மூன்றணா விலையில் இருக்கலாமா என்று கேட்டிருந்தேனே, ஞாபகமிருக்கிறதா? அதற்கு மாதம் ஒரு முறையாக இப்போதுள்ள விலையிலேயே இருக்கவேண்டும் என்று 327 குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். இரண்டணா அல்லது மூன்றணா எதுவாயிருந்தாலும் மாதம் இரு முறையாகியே தீரவேண்டும் என்று 481 குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். இரண்டு கட்சியையும் ஆதரித்துக் காரண விளக்கங்களுடன் அந்தக் குழந்தைகள் எழுதியிருப்பதைப் பார்த்தால் மாதம் ஒரு முறையாகவும், மாதம் இரு முறையாகவும் இரண்டு மாதிரியாகவும் செய்துவிடலாமா என்று தோன்றுகிறது. 'இதில் யார் சொல்வதடா நியாயம்? யார் சொல்வதடா சரி?' என்று மலைப்புத் தட்டுகிறது.

இவர்கள் எழுதியிருப்பது போதாதென்று சில பெற்றோர்கள் கூட எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாவரும் ஒரு முகமாய் இப்போதுள்ளதையே விரும்புகிறார்கள். மாதிரிக்கு ஒன்றிரண்டு கடிதங்களைத் தபால் பகுதியில் பிரசுரித்திருக்கிறேன். மற்றவற்றில் சிறந்த கடிதங்களைப் பொறுக்கி அடுத்த இதழில் வெளியிடப் போகிறேன்.

உங்கள் விடுமுறையை ஆனந்தமாகக் களிப்புடன் நடத்துங்கள்; இன்பக் கதைகள் எல்லாம் எழுதுங்கள்; உங்கள் பிரயாணத்தைப் பற்றியும் நீங்கள் சென்ற ஊரைப் பற்றியும் அழகழகாக எழுதுங்கள். கண்ணனுக்கு உடனே அனுப்புங்கள். நான் இருக்கிறேன், அவை நன்றாக இருந்தால் உடனே பிரசுரித்துப் பரிசும் கொடுக்க!

அடுத்த மாதம் சந்திப்போம். ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

ஜம்பு

ஆர்வி

5

ஒவ்வொரு நிமிஷம் செல்வதும் பெரிய வேதனையாக இருந்தது. ஒன்று.. இரண்டு.. மூன்று நான்கு.... ஐந்து நிமிஷங்கள் ஆயின.

இன்ஸ்பெக்டர் பிரசாத் மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தார். அவர்கள் இருவரையும் கையிலுள்ள சூட் கேஸுடன் பிடித்தால்தான் பிடித்தது, இல்லாவிட்டால் அவர்களைப் பிடித்தும் பயனில்லை.

பஸ்ஸில் இனி உட்கார்ந்திருந்து என்ன செய்வது? அதனால் ஜம்பு, "இன்ஸ்பெக்டர் ஸார்! நேராக ஸர்க்கஸ் கூடாரத்துக்கே ஓட்டச் சொல்லுங்கள்! எப்படியும் அவர்கள் அங்கே வராமல் போகமாட்டார்கள்!" என்றான்.

"சரி, அதுதான் தேவலை. டிரைவர்! அப்படியே ஓட்டப்பா!" என்றார் இன்ஸ்பெக்டர்.

பஸ் மந்தைவெளியை நோக்கிப் பறந்தது.

ஜம்புவுக்கு அன்று நடந்ததெல்லாம் ஒரு திகிலைக் கொடுத்தது. அப்பாவுக்குத்தெரியாமல், மாட்டினி ஷோ' வுக்குப் போனது, கடிதம் தொலைந்தது, அதைத் தேடிக் கொண்டு போனபோது யாரோ அவன் கண்களைக் கட்டி இழுத்துச் சென்றது, அறையில் மாட்டிக் கொண்டது, நெருப்புப் பிடித்துக் கொண்டது, கடைசியில் இன்ஸ்பெக்டர் முன்போய் நின்றது— இவ்வளவும் அவன் நினைவுக்கு வந்தன.

பிறகு எவ்விதம் அவன் சமுத்திரக் கரைக்கு வந்தோம் என்று எண்ணிப் பார்த்தான். இன்ஸ்பெக்டர் பிரசாதிடம் குரங்கு வந்தது முதல் அந்த அறைக்குள் மாட்டிக்கொண்டது வரையில் ஒன்றையும் ஒளிக்காமல் அப்படியே சொல்லிவிட்டான்.

"சரி; கடிதம் போனால் போகட்டும். உனக்கு அதில் என்ன எழுதியிருந்தது என்றுதான் தெரியுமே- என்னுடன் நீ வருகிறாயா?" என்றார் இன்ஸ்பெக்டர். அவருக்கு ஜம்பு சொன்னது அவ்வளவும் உண்மையாகத்தான் இருக்கும் என்று பட்டது.

"ஓ! நான் தாராளமாய் வர்றேன், ஸார்!"

"அப்படி நீ சொன்னபடி எதுவும் நடக்காவிட்டால் உன்னை என்ன செய்வது?" என்று கேட்டார் பிரசாத்.

ஜம்பு சிறிது நேரம் விழித்தான். பிறகு தைரியமடைந்து, "நான் சொன்னதெல்லாம் தப்பு என்று நீங்கள் அவநம்பிக்கைப் படுகிறீர்களா?" என்றான்.

"தப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவநம்பிக்கையும் உண்டாகிறது!"

ஜம்புவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.



"சரி, வா ஸ்டேஷனுக்குப் போவோம்" என்று எழுந்தார் இன்ஸ்பெக்டர்.

போலீஸ் ஸ்டேஷன் போனதும் இன்ஸ்பெக்டர் ஜம்புவின் விலாசத்தைக் குறித்துக்கொண்டார். அதற்குப் பிறகு யாருக்கோ ஒரு கடிதம் எழுதி ஒரு ஜவானிடம் அனுப்பினார். அப்புறம் ஸி. ஐ. டி. ஆறுமுகத்தைப் பார்த்து, "601, கிளம்பு!" என்றார். இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. ஜம்பு வெறுமே உட்கார்ந்திருந்தான். இன்ஸ்பெக்டரும் ஆறுமுகமும் ஸ்டேஷன் அறைக்குள் சென்று கிளம்புவதற்குப் பத்து நிமிஷம் ஆயிற்று. அதன் பிறகு கால்நடையாகவே அவர்கள் மூவரும் சான் தோம் பீச்சுக்கு வந்து இருளில் பிரவேசித்தார்கள்.

ஜம்புவின் மனசு மட்டும் பக் பக்கென்று அடித்துக்கொண்டது. இந்தத் தடவை அவனுடைய அப்பா அவனைத் தொலைத்துவிடப் போகிறார் என்று நெஞ்சு கலங்கியது. இருந்தாலும் இங்கே கடற்கரையில் நடந்த விஷயங்கள் அவனுடைய சொந்தக் கவலைகளை மறக்கச் செய்துவிட்டன. எப்படியாவது அந்த மோட்டார் சைக்கிள் ஆட்களைப் பிடிக்கவேண்டுமே என்று அவன் மனசு துடிக்கத் தொடங்கியது.

"—சர்..கர்..ர்.." என்று பஸ் ஒரு பெரிய குலுக்கலுடன் பிரேக் போட்டு நின்றது. ஜம்பு எதிரே பார்த்தான். ஸர்க்கஸ் கூடாரத்தின் வாசலில் ஒரே வெளிச்சம். வெற்றிலை பாக்குக் கடைகள் வாசலில்கூடக் கூட்டம் இல்லை. வெளிக் கேட்டுகளில் டிக்கட் பரிசோதகர்களைத் தவிர யாரும் இல்லை. பஸ்ஸிலிருந்து இன்ஸ்பெக்டரும் ஜம்புவும் இறங்குவதற்குள் ஓர் ஆச்சரியமான விஷயம் நிகழ்ந்தது.

அவர்கள் தேடிவந்த மோட்டார் சைக்கிள் பஸ்ஸைத் தாண்டிக் குறுக்கே பாய்ந்து கூடாரத்தை நோக்கிச் சென்றது. பஸ் டிரைவர் பிரேக் போடாமல் மட்டும் இருந்திருந்தால் நிச்சயம் இரண்டும் மோதிக்கொண்டிருக்கும்!

எதிரே கூடாரத்தினுள் ஸர்க்கஸ் நடந்துகொண்டிருந்தது. பாண்டு வாத்திய ஒலியும் டிரம் அடிக்கும் ஒலியும் கேட்டுக்கொண்டிருந்தன.

ஸர்க்கஸ் கோமாளி பார் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, "லால....லல..ரா..ர..ர..ர" என்று அபஸ்வரமாகப் பாடிக்கொண்டிருந்தான். கூடாரத்தின் வாசல் துணியை அப்போது தூக்கிக் கட்டியிருந்தார்கள். ஒரு பெரிய மரப் பலகையை ஒரு

கட்டையின் மேல் சாய்வாகச் சாய்த்து வைத்திருந்தார்கள். எதிரே மற்றொரு பலகை இருந்தது. இரண்டுக்கும் நடுவே ஐந்து கஜம் போல இடைவெளி இருந்தது.

ஜம்புவும் இன்ஸ்பெக்டரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மோட்டார் சைக்கிள் கூடாரத்தை ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு வந்தது. மோட்டார் சைக்கிள் வாசல் துணியைக் கட்டியிருக்கும் இடத்துக்கு வருவதும் ஸர்க்கஸ் ஆட்கள் பலகையை இடைவெளி போட்டு வைத்துவிட்டு அகன்றதும் சரியாக இருந்தன.

'டம்டம் டமடம' - டிரம் படபடவென்று அடித்தது. காலரியிலிருந்தும் பெஞ்சுகளிலிருந்தும் சிறுவர்கள் சீட்டியும் விசிலுமாக அடித்துக் கூவினார்கள்.

—"டர்...டர்—"

மோட்டார் சைக்கிள் கழுகுப் பாய்ச்சலில் பலகையின் மீது சர்ரென்று சத்தத்துடன் சீறி எறியது. டபாரென்று அடுத்த கணத்தில் கண் மூடிக் கண் திறப்பதற்குள் அநுமார் கடலைத் தாண்டியது என்று வர்ணிப்பார்களே அது போல அந்த இடைவெளியைத் தாண்டி எதிரே இருந்த பலகையின் மீது வந்து குதித்து மீண்டும் ஓடத் தொடங்கியது. ஒரே கூச்சல்! மோட்டார் சைக்கிள் ஒரு சுற்றுச் சுற்றியது. இரண்டாவது சுற்றுச் சுற்றும்போது வட்டத்தினுள் அது ஓடுவதாகவே தெரியவில்லை. சாய்வாகப் படுத்துக் கொண்டே உருளுவது போலத்தான் இருந்தது. இங்கே ஓரிடத்தில் பார்த்துக்கொண்டே யிருப்பதற்குள் மறுபடி ஒரு சுற்றுச்



"ஹல்லோ..ராமுவுக்கா? உடம்பு சரியில்லையா?".. லீவுதானே....சரி; யார் பேசறது!

"எங்கப்பாதான் ஸார், பேசறார்.."

தாயார்: ஏண்டி கோமளா, இந்தப் பதைபதைக்கிற வெயிலிலே உட்கார்ந்து ஏதுக்காக விசிறிக்கிறே? உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?

கோமளா: இல்லையம்மா, தலை சீக்கிரமா உலருவதற்கு வெயிலிலே உட்கார்ந்திருக்கேன். வேர்க்காமெ இருக்கிறதுக்கு விசிறிக்கிறேன்.

—R. சம்பா (C. 182).

சுற்றி வந்தது. கடைசியாக எதிரே புலிக் கூண்டுக்கு அருகே அமைத்திருந்த பெரிய சட்டங்கள் அடித்த தொட்டிக்குப் பலகை வழியாக ஏறியது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோக உடையில் இருந்ததால் எல்லாம் வெகு சுலபமாக இருந்தது. யாரும் அவர்கள் உள்ளே நுழைந்து முன் வரிசையிலிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்திருந்ததைத் தடுக்கவில்லை. ஜம்பு இந்த மோட்டார் சைக்கிள் 'ஜம்ப்'பையும் அது தொட்டிக்குள் இறங்கிச் சுற்றியதையும் திறந்த வாய் திறந்தபடி பார்த்துக்கொண்டேயிருந்தான். மோட்டார் சைக்கிளில் எப்போதும் அந்த ஒருவன் தான் உட்கார்ந்து இந்த 'பீட்'ஸுகளைச் செய்வது வழக்கம். ஆனால் கடற்கரையில் பின்னால் ஏறிக்கொண்டவன் கீழே இறங்குவதற்கு நேரமேயில்லை. கையில் இருந்த அந்தத் தோல் பையுடனும் பின்னால் இன்னோர் ஆளுடனும் அன்று நடந்த வேடிக்கையைக் கண்டு ஒரே ஆரவாரமாய் இருந்தது.

வாசலில் போலீஸ் ஊது குழல் ஊதியது. இந்த ஆரவாரத்திடையில் வேறு யாரும் கவனிக்கா விட்டாலும் இன்ஸ்பெக்டர் பிரசாத் அதைக் கவனிக்காமல் இருப்பாரா?

அவர் ஜம்புவின் காதருகில் என்னவோ முணுமுணுத்துவிட்டுச் சரக்கென்று வெளியேறினார். ஜம்பு அவர் சொன்னதற்குத் தலையை ஆட்டிவிட்டுத் தன்னுடைய இடத்திலேயே உட்கார்ந்து கொண்டான். இதை ஒருவருமே கவனிக்கவில்லை.

வெளியே சென்ற இன்ஸ்பெக்டர் பிரசாத் போலீஸ் லாரியில் பத்து ஜவான்களுடன் 601 கிற்பதைக் கண்டார். அவன் இப்பொழுதும் 'மப்டி'யில், அதாவது சாதாரண உடையில்தான் இருந்தான். ஆனால் மற்றவர்கள் கத்தி செருகிய துப்பாக்கி சகிதம் கிரீச் கிரீச் என்ற பூட்ஸுகள் அணிந்தவாறு ஒரே வரிசையில் நின்று பிரசாத்துக்கு ஸல்யூட் அடித்தார்கள். இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்தை அருகில் அழைத்து, கூடாரத்தைச் சுற்றிக் காட்டி சில உத்தரவுகள் போட்டார். ஆறுமுகம் அதே போல மற்றவர்களுக்குக் கையைக் காட்டிச் சைகை செய்தான்.

"ஒரு தரம் விஸில் சப்தம் கேட்டால் எல்லாரும் ஜாக்கிரதையாகி விடவேண்டும். இரண்டு தடவை விஸில் சப்தம் கேட்டால் தயாராகப் போலீஸ் லாரியருகில் வந்து ஆஜராகி விட வேண்டும்!" என்று ஆறுமுகம் அவர்கள் ஒவ்வொருவராகப் போகும்போது சொல்லி அனுப்பினான்.

பத்து ஜவான்களில் முதல் ஐந்து பேர்கள் வலதுபுறமாகவும் பின் ஐந்து பேர்கள் இடதுபுறமாகவும் கூடாரத்தை வளைத்துக் கொள்ளப் பிரிந்து சென்றார்கள். ஆறுமுகம் பின் வாசலை நோக்கிச் சென்றான்.

வாசலில் இருந்த டிக்கட் பரிசோதகன் ஆடு திருடின கள்ளன் மாதிரி விழித்துக்கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் அவனிடம் சென்று அவன் உதவியுடன் ஸர்க்கஸ் மானேஜர் உட்கார்ந்திருக்கும் பெட்டிக்குள் போனார். தகரத்தினால் கூரையும் மரத்தினால் தடுப்பும் அடித்த அந்தப் பெட்டிக் கூண்டை, காபின் என்பார்கள். அதற்குள் மானேஜர் ஒரு பிடி நரைத்த மீசையுடன் ஒரு தடிச் சுருட்டு ஒன்றை ஊதிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் வருவதைக் கண்டதும், அவர் சுருட்டை விட்டெறிந்துவிட்டு அலறியடித்துக்கொண்டு எழுந்தார். மார்பில் பளபளவென்று தங்கச் செயினில் கோத்த பாக்கெட் கடிகாரம் மின்னியது.



“ஸலாம், மகராஜ்!” என்று ஹிந்துஸ்தானியில் பேச ஆரம்பித்தார் மானேஜர். பிரசாதும், “ஸலாம்” என்று அதே பாஷையில் பேசினார்.

“கியா....சமாசார்....ஹை, மகராஜ்!”

இன்ஸ்பெக்டர் அந்த மானேஜர் முன் போய் உட்கார்ந்தார். அவர்கள் பேசியவை:

“அந்த மோட்டார் சைக்கிள் ஆசாமியைக் கைது செய்ய வந்திருக்கிறேன். உட்கார நேரமில்லை. அந்த விளையாட்டு முடிந்து அவன் வரும்போதே கைது செய்ய வேண்டும்!” என்றார் பிரசாத்.

ஜோதிடர்: தம்பி, நீ ரொம்ப விசனத்தோடே வந்திருக்கே. பரீட்சை பாஸ் ஆகுமா ஆகாதான்னு ரொம்பக் கவலைப்படறே. என்ன, அப்படித்தானே?

பையன்: ஹூம்- அதெல்லாமில்லை, ஜோஸ்யரே. இப்போ மாட்டினி ஷோவுக்குப் போயிட்டு வந்தா வீட்டிலே உதை விழாமல் இருக்குமான்னு பாக்கணும்.

—V. சித்ரா (C. 201).

“எதற்காக அப்படிக் கேட்கிறீர்கள்?” என்றார் மானேஜர் பயந்து உளறியபடி.

“கைது செய்ய எனக்குக் காரணங்கள் இருக்கின்றன!”

அந்த மானேஜரின் முகம் திடுக்கிட்டுச் சுருங்கியது.

“ஐயோ! அவன் இல்லாவிட்டால் எங்களுக்கெல்லாம் இங்கே வேலையே இருக்காதே. கூட்டமே வராதே, மகராஜ்!”

இன்ஸ்பெக்டர் அதிக நேரம் பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை. “சரி; கைது செய்யாவிட்டாலும் அவனை உடனே சோதனையாவது செய்யவேண்டும்!”

அடுத்த நிமிஷத்தில் போலீஸ் குழல் ஒரு தடவை ஊதியது.

பின்னால் சிங்கம் இரும்புக் கூண்டில் உறுமிக்கொண்டிருந்தது. யானைகள் பிளிறின. குதிரைகள் மிரண்டன. குரங்குகள் கிரீச்சிட்டன.

இன்ஸ்பெக்டர் விரைவாகப் பின்புறம் நோக்கி ஓடினார். போலீஸ் ஜவான்கள் துப்பாக்கியைத் தயாராக நீட்டியபடி அவரவர் இடத்தில் நின்றார்கள்.

இன்ஸ்பெக்டர் வி. ஐ. டி ஆறுமுகம் நிற்குமிடத்துக்கு வந்தார். அவன் அந்த ஸர்க்கஸ்காரனைப் பிடித்துக்கொண்டு நின்றான். இன்ஸ்பெக்டர் அவன் கையிலிருந்த தோல் பையை லாவி அதைப் பிரித்தார். கையை விட்டுத் துழாவினார். தலை கீழாகக் கவிழ்த்துப் பார்த்தார். பை காலி!

இன்ஸ்பெக்டர் முகத்தில் ஈயாடவில்லை.

(தொடரும்)

குளிகைத் தீவு
கதை: ஆர்வி சித்திரம்: சங்கர்...
மறு நாள்
நாகநந்தா! உன் வீரமே வீரம்! என் பிழையை மன்னித்து விடு!
இருவரும் பேசிக்கொண்டே அரண்மனை செல்கிறார்கள்
நான் வந்த காரியம் இன்னும் முடியவில்லை.
இனி பூதத்தைப் பற்றிய கவலை வேண்டாம்
இளவரசே! இந்த ஐந்து கன்னிகைகளுடைய தீவுதான் இது. இந்தத் தீவுக்கும் நீயே அரசன். இவர்களையும் உன் நாட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.
இவர்களுக்கு இங்கேயே முடி சூட்ட விரும்புகிறேன் என்னுடன் இவர்கள் வருவது அசாத்தியம்! முடிசூட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்...
அப்படியே
நாகநந்தன் முன்னிலையில் பஞ்ச கன்னிகைகளுக்கு முடி சூட்டு விழா நடை பெற்ற பின்...
சபையோர்களே! இனி கன்னித்தீவுக்கு நாகநந்தன் அவர்களே சக்கரவர்த்தி!
இந்த பஞ்ச கன்னிகைகளுக்கு விரைவிலே தகுந்த வரன் பார்த்து அவர்கள் திருமணத்துக்கு ஏற்பாடு செய்வதே என் கருத்து. நான் வந்த காரியம் ஆண்டவன் அருளால் முடியட்டும்!
வெற்றி உண்டாகட்டும்!
தலைவனே! கன்னிகைகளே! எனக்கு விடை கொடுங்கள்! ஆண்டவன் அருளால் உங்களைப் பிறகு சந்திப்பேன்!
மந்திரச்சோலை இருக்கும் தீவு இன்னும் எவ்வளவு யோசனை தூரத்தில் இருக்கிறதோ தெரியவில்லையே! இன்னும் என்னவெல்லாம் நேருமோ! ம்.....
இரவு பகல் பாராமல் பறந்து கொண்டேயிருந்த சூரக் கழுகு ஒரு தீவின் சமீபம் வந்ததும் மேலே பறக்கமுடியவில்லை.
என்ன சூரா! ஏன் தயங்குகிறாய்? களைத்துப் போய் விட்டாயா? என்னவோ ஒரே வெப்பமாய் தகிக்கிறதே!
சூரா! உன் இறகுகள் பொசுங்குகின்றன. என் ஆடைகளுடன் உடம்பும் பொசுங்குகிறது.. கீழே இறங்கு! அதோ வேறு ஒரு தீவு தெரிகிறது, பார்!
அடுத்த கணமே சூரன் தலைகுப்புறக் கீழே விழுகிறது. நாகநந்தன் அதன் உடலைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டிருக்கிறான்.
அடர்ந்த காட்டின் நடுவே விழுந்த சூரக்கழுகு சோர்ந்து மூர்ச்சையடைகிறது
நாகநந்தன் ஓட்டமாய் ஓடி, தன் ஆடையை நனைத்து வந்து அதன் மூர்ச்சையைத் தெளிய வைக்க முயலுகிறான். கழுகு கண்களைத் திறக்கவில்லை....
இது யாருடைய வஞ்சமோ தெரியவில்லை. இல்லாவிட்டால் சூரனுக்கு இந்தக் கதி நேருமா?
இந்தத் தீவின் பெயரைத் தெரிந்து கொள்ளலாம். அதற்குள் சூரனுக்கும் மூர்ச்சை தெளிந்து விடும்!
அடர்ந்தகாடு. துஷ்ட மிருகங்கள் பயங்கரமாய் கர்ஜிக்கின்றன ஓநாய், முள்ளம்பன்றி முதலியவை வெருண்டு ஓடுகின்றன. காட்டாறுகளும் கரும் பாறைகளும் கானகத்தை மேலும் இருளாக்குகின்றன. உலவிய வாறு அவன் நடக்கிறான்...

இரண்டு புலிக்குட்டிகள் விளையாடுவதை நாகநந்தன் பார்க்கிறன்.
கா..ர்...
ஆனல் அடுத்த கணம்....
ஒரு காட்டு வாலிபன் மரத்தில் தொங்கிய கொடியைப் பற்றிக் கொண்டு தாவி வருகிறன்..
இவ்விதம் பல மரங்களுக்குத் தாவி, கடைசியாக மலையுச்சியை அடைகிறர்கள். அங்கே உட்கார்ந்து கொண்டு
நான் ஓர் அநாதை. குளிகைத் தீவின் இளவரசியால் இந்த மந்திரத் தீவில் அலைகிறேன்.
யாரப்பா நீ? நல்ல சமயத்தில் வந்தாயே!
உன் கதை ஆச்சரியமாய் இருக்கிறதே! வா! முதலில் பசியாறுவோம். பிறகு நாம் பேசிக் கொள்ளலாம்
அவன் வாயில் கையை வைத்து ஊதியவுடன் எங்கிருந்தோ ஒரு குரங்கு மரத்திலிருந்து தாவி வந்து குதித்தது.
க்ரீச்..
ஜாம்பவா! உனக்கு ஒரு புதிய தோழன். எங்களுக்குப் பசிக்கிறது! உம், சீக்கிரம் ஏதாவது பழங்கள் கொண்டு வா!
அடுத்த கணமே ஜாம்பவன் எங்கோ சென்று கனிவர்க்கங்களைக் கொண்டு வந்தது.
வித விதமான கனிவகைகளை தின்று கொண்டே
அப்படியானல் இது தான் மந்திரத் தீவா?
இந்த மந்திரச் சேலைக்காகத்தான் நானும் வந்தேன். என் கதியைப் பார்! இரண்டு வருஷங்களாக இந்தக் காட்டில் அலைந்து வாழ்கிறேன்.
இந்த அரசி ஒரு கொடிய அரக்கி. அந்தக் கிழவியின் பேத்தி. இவளிடமிருந்து மீளவே முடியாது. மந்திர தந்திரங்களில் வல்லவள். உன் பூதத்தின் பாச்சாவெல்லாம் இவளிடம் பலிக்காது.....
பார்க்கலாம்!

அந்நியர்கள் இந்தத் தீவின் எல்லைக்குள் நுழையப் போனால் அப்படியே வெந்து பஸ்பமாகி விடுவார்கள். இந்த எல்லையில் ஓடும் ஓடை நீர் கூட தள தளவென்று கொதிக்கும்...
இவ்வ... சிரமப்பட்டு வந்து ...ந்தத் தீவினுள்ளே நுழைய வகையே இல்லாமல் இருப்பதை அறிந்த நாகநந்தன் யோசனையில் ஆழ்ந்தான்...
உம்; அதுதான் சரி! பூதமே! உடனே தீவினுள் போக வழி செய்!
என்னைப் போன்ற ஆயிரம் பூதங்கள் இந்தத் தீவைக் காவல் காக்கின்றன. என்னால் இந்த ஒரு காரியம் மட்டும் முடியாது. நண்பா! வேறு எது வேண்டுமானாலும் சொல். காத்திருக்கிறேன்.
முதலில் தூக்கமுகை இங்கே கொண்டு வா!
நண்பா! நாம் இந்த அரசியைத் தந்திரத்தினாலேயே வெல்ல வேண்டும். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பூமிக்கு மேல் ஆகாயம் வரையிலும் இந்தத் தீவுக்குள் நுழைய முடியாதபடி செய்திருக்கிறாள். ஆனால்...
ஆனால் என்ன?
பேஷ்! சரியான யோசனை! அந்த முயற்சி பலிக்கலாம்.
பூமியைக் குடைந்து சென்றால் என்ன? பூதமே! நேரே அவள் அரண்மனைக்கு எதிரே போய்ச் சேரும்படி ஒரு சுரங்கப் பாதையை அமைத்து விடு! எங்கே உடனே ஏற்பாடு செய்!.
தீ! புகை! என்னால் நுழைய முடியவில்லையே!
வர வர அனல் அதிகமாக வீசுகிறதே!
இளவரசே! இது அரக்கனின் வேலை! அவனைக் கொன்று விட்டால் உள்ளே போகலாம். நான் வெளியே இழுத்து வருகிறேன். ஒரே வெட்டாக வெட்டி வீழ்த்தி விடு! ஜாக்கிரதை! அவன் மூச்சுப் பட்டால் ஆபத்து!
சரி! உடனே இழுத்து வா!
பூதம் உள்ளே நுழைந்தது ஒரே கோரமான சத்தம் காதைத் துளைத்தது. சற்று நேரத்தில் பூதம் அரக்கனுடன் வெளியே வந்து விழுந்தது. அப்போது நாகநந்தன் வாளை உருவிக் கொண்டு பாய்கிறான். ஆனால் அரக்கன் காட்டு வாயினை வாவிப் பிடிக்கிறான்.
அதற்குள் நாகநந்தன் வாள் அரக்கனின் தலையை வெட்டி விடுகிறது.
ஆ!.....
நாகநந்தன் நிலை இவ்வாறு இருக்க, பூம்புகாரில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். குளிகைத் தீவில் இருந்த சீரகன் ரகசியமாய்ப் பிம்பருபனைச் சந்தித்து நாகநந்தனுடைய வரலாற்றையெல்லாம் தெரிந்து கொண்டு, மந்திரக் கோலின் உதவியால் நவரத்தின வியாபாரி போல மாறுவேடமணிந்து பூம்புகாரை அடைகிறான். பூம்புகாரின் இயற்கை வளப்பத்தையும் அழகிய கடற்கரையையும் கண்ட சீரகன் நகருக்குள் பிரவேசிக்கிறான்.........

இந்த ஊரில் என்ன அப்பா விசேஷம்! ஏன் ஊரே களையிழந்து காணப்படுகிறது?
இளவரசனை போனஇடம் தெரியவில்லை. அரசர் நிலை கவலைக்கிடமாய் இருக்கிறது.
சீரகன் அரண்மனைவாயில் உள்ள ஆராய்ச்சிமணியை அடிக்கிறன்......
யாரையா நீர்? என்ன விசேஷம்?
உன் அரசரிடம் சென்று ஓர் அயல் நாட்டு வியாபாரி பார்க்க வந்திருப்பதாகத் தெரிவி!
இப்பொழுது அரசரை யாரும் பார்க்கமுடியாது அவர் உடல் நிலை சரியாக இல்லை.
சேவகன் உள்ளே விட மறுக்க, சீரகன் மந்திரகோலினால் அவனை மயங்கி விழச் செய்து விட்டு உள்ளே நுழைகிறன்.
அவன் நந்தவனத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வரும்போது..
இந்தப் பாம்பைக் கொல்ல ஒரு வழியும் தெரியவில்லையே! என்னைத் தவிர மற்றவர் கண்களுக்கு இது இருப்பதே தெரியவில்லையே!
மறைவில் நின்று அவள் தனக்குள் பேசியவற்றைக் கேட்ட சீரகன் வெளிப்பட்டு.......
யார் நீங்கள்? உங்களை முன்பின் நான் பார்த்ததில்லையே? எப்படி இந்த அரண்மனைக்குள் நுழைந்தீர்கள்?
குந்தலா! குந்தலா! என்னைத் தெரியுமா உனக்கு?
ஹஹ் ஹஹ் ஹா! என்னை யார் இங்கே தடுக்க முடியும்? இங்கு மட்டும் என்ன? எங்கும் என்னை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாது, தெரியுமா?
ஹா!
இவன் கையில் இருப்பது மந்திரக் கோல் மாதிரி யிருக்கிறது! எதற்கும் முதலில் இவனை யார் என்று தெரிந்து கொள்ளலாம்.
என்ன யோசிக்கிறாய்?
ஆ! அதோ பாம்பு சீறுகிறது! இதை யாராலும் கொல்லமுடிய வில்லை. நான் அருமையாக வளர்க்கும் இந்தச் செடியை நெருங்கவிடமாட்டேன் என்கிறதே!
பூ! இவ்வளவுதானா! இதோ பார்!
சீரகன் மந்திரக்கோலை ஆட்டுகிறன். அந்தப் பாம்பு அவன் முன் படத்தைப் போட்டு சுருண்டு விழுகிறது
மண்டபத்தருகில்....
நானோ பெண். தனியாக வேறு இருக்கிறேன். நீங்களோ ஆண்பிள்ளை. பெரிய மாயாவியாகவும் இருப்பீர்கள் போலிருக்கிறதே!
பயப்படாதே குந்தலா!
இங்கே ஆண்கள் வருவது ஆபத்து. நீங்கள் முன்னால் அதோ அந்த மண்டபத்தில் உட்காருங்கள். நான் பின்னால் வருகிறேன்.
சீரகன் மறைவில் பார்க்கிறன். குந்தலா மோதிரத்தை அவசர அவசரமாக எடுத்துக் கையில் அணிந்து கொள்கிறள்
குந்தலா! இனி இந்த நாட்டுக்கு நீதான் அரசி! உன் அத்தான் நாகநந்தனுடைய கதி தெரியுமா? அந்த மோதிரத்தில் பார்!
மறைக்காதே! எனக்கு எல்லாம் தெரியும். நாகநந்தன் இனி திரும்ப மாட்டான்!
மோதிரமா!
தொடரும்...

கிரிக்கெட் ஜுரம்

என். எஸ். ஸ்ரீ.

“எங்கேடா போயிருந்தாய், இத்தனை நேரம்? பத்து மணிக்கு வீட்டை விட்டுப் போனவன், நன்றாகத்தான் இருக்கிறது நியாயம்! கேட்பார், கொள்வார் இல்லையென்று எண்ணிக்கொண்டு விட்டாயா? அதோ, அப்பா தடிக்கு நாமம்தான் போட்டு வைத்திருக்கிறார்” என்று என்னை வரவேற்றாள் அம்மா.

இதைக் கேட்டுவிட்டு மாடியறையில் இருந்த அப்பா, “யாரது அங்கே? வந்துவிட்டானா?” என்று அங்கிருந்தவாறே கேட்டார். தடிக்கு நாமம், விபூதி, பொட்டு, இன்னும் என்னென்ன சின்னங்கள் உண்டோ அத்தனையும் போட்டு வைத்திருக்கிறாரோ என்று கூடச் சந்தேகிக்கும்படி இருந்தது அப்பாவின் தொனி.

“இதோ வந்திருக்கிறான்” என்றாள் அம்மா.

இன்று முதுகும் கன்னமும் நம்முடையது இல்லை என்று முடிவு கட்டிவிட்டேன்.

“எப்பொழுது வீட்டை விட்டுப் போனாய்?” என்றார் அப்பா.

‘அதான் பத்து மணிக்கு வீட்டை விட்டுப் போனேன் என்று தெரிந்திருக்கிறதே, என்னை வேறு கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன?’ என்று மனசுக்குள் எண்ணிக்கொண்டு, பேசாமல் நின்றுகொண்டிருந்தேன்.

“கேட்கிறேன், என்னடா பேசாமல் நின்றுகொண்டிருக்கிறாய்?” என்று ஓர் அதட்டு அதட்டினார். நல்லவேளை, அது சுதுவாது இல்லாமல் கட்டப்பட்ட பழைய காலத்துக் கட்டிடமாக இருந்ததோ, பிழைத்ததோ! இந்தக் காலத்துக் கட்டிடமாக இருந்தால் அடுத்த நிமிஷமே தகர்ந்து விழுந்திருக்கும். அவ்வளவு பயங்கரமாக இருந்தது, அந்த இரும்புக் குரல் கர்ஜனை! பதில் சொல்லாவிட்டால் கை, கன்னத்தை விசாரித்துவிடும் என்று பயந்தவனாய், “பத்து மணிக்கு!” என்றேன்.

“பத்து மணிக்கு வீட்டைவிட்டுப் போனவன் இப்பொழுது வந்திருக்கிறாய்? உம்! இப்பொழுது மணி என்ன ஆகிறது, தெரியுமா?” என்றார்.

‘நானும் ஒரு ரிஸ்ட்வாச் வேண்டும், வேண்டும் என்று எத்த

னையோ நாளாய்க் கேட்டுக்கொண் டிருக்கிறேன். ஒன்று வாங்கிக் கொடுத்திருந்தால் சட்டென்று அதைப் பார்த்துத் தயங்கா மல் பதில் சொல்லியிருப்பே னல்லவா?' என்று சொல்லவேண் டும்போல் இருந்தது. ஆனால் அதைச் சொல்லாமல், "ஆறரை யாகிறது" என்றேன்.

"காலையில் பத்து மணிக்கு வீட்டை விட்டுப் போனவன், ஆறரை மணிக்கு வந்திருக்கிறாய்! உம்! எங்கே போயிருந்தாய் இவ் வளவு நேரம்?"

டாக்டர்: என்னப்பா, உடம்பு எப்படி இருக்கிறது?

நோயாளி: வலியெல்லாம் நின்றுவிட்டது. ஆனால் மூச்சுத் தான் விடமுடியாமெ கஷ்டமாய் இருக்குதுங்க!

டாக்டர்: கவலைப்படாதே! அது வும் இரண்டு நாளிலே நின்று விடும்!

—M. ஆவுடையப்பன்.

பேசாமல் நின்றுகொண் டிருந் தேன் நான்.

"ரங்குவின் வீட்டுக்குப் போய், சீட்டு விளையாடி இருப்பான்" என்று அம்மா தூபம் போட்டாள்.

"ஹூக்கும்! நீதான் ரொம்ப பார்த்தாய்..?" என்றேன் நான்.

"பார்க்கணுமா என்ன? சழுதை கெட்டால் குட்டிச்சுவர்தானே! காலையில் எழுந்தவுடன் நூறுதரம் வந்துவிட்டுப் போய்விட்டான் ரங்கு" என்றாள் அம்மா.

"நான் ரங்குவின் வீட்டுக்குப் போகவே இல்லை. வேண்டுமானால் அவர்கள் வீட்டிற்குப் போய் விசா ரித்துப் பாருங்கள்!"

"சரி! பின் எங்கே போயிருந் தாய்?" என்றார் அப்பா.

மௌனம்.

"இல்லாவிட்டால் கோடி வீட் டில் ஒரு 'தறிதலை' இருக்கிறதே, அத்துடன் ஊர் சுற்றப் போயிருப் பான்!" என்றாள் அம்மா.

"இன்று நான் அவன் மூஞ்சி யைப் பார்க்கவேயில்லை, தெரியுமா?"

"பின் எங்கே போயிருந்தாய்? சினிமாவுக்குப் போயிருந்தாயா?" என்றார் அப்பா.

"சினிமாவுக்குப் போக என் னிடம் பணம் ஏது?"

"அப்போ எங்கேதான் போயி ருந்தாய்?"

"ஸ்கூல் கிரௌண்டுக்கு."

"கிரிக்கெட் விளையாடுவதற்கா?"

"ஆமாம்!"

"தெரியுமே எனக்கு. அதற்குத் தான் கேட்டேன். நான் எத்தனை தரம் சொல்லி யிருக்கிறேன், வெயிலில் போய் விளையாடாதே என்று. பங்குனி மாதத்து வெயில் வெளியில் தலைகாட்ட முடிய

வில்லை. இந்த வெயிலில் போய் விளையாடிவிட்டு வந்திருக்கிறாயே! என்ன தைரியம் உனக்கு! நாளைக்கு உடம்பு என்று படுத்துக்கொண்டால் டாக்டருக்கு யார் பணம் கொடுப்பது? நான் போன வாரமே வேண்டாம் என்று சொன்னேனல்லவா?''

''......''

''சொன்னேனா இல்லையாடா?''

''நான் மாத்திரமா போயிருந்தேன்? எல்லாப் பிள்ளைகளும்தான் வந்திருந்தார்கள்!''

''மீதிப் பிள்ளைகளைப்பற்றி நான் கேட்டேனா உன்னை? உன்வரைக்கும்தானே கேட்டேன்? வேண்டாம் என்கிற காரியத்தைச் செய்தே தீருகிறது என்று அதென்ன போக்கிரித்தனம்?'' என்று நறுக்கென்று தலையில் ஒரு குட்டுக் குட்டினார்.

''ஆமாம்! அவர்களெல்லாம் விளையாடலாம்! நான் மாத்திரம் வீட்டிலேயே அடைப்பட்டுக் கிடக்க வேண்டும்!'' என்றேன் அழுது கொண்டே.

''திரும்பத் திரும்ப வாயாடாதே என்று சொன்னேனல்லவா? அதென்ன கெட்ட வழக்கம், எதை யாவது சொன்னால் பதிலுக்கு வாயாடுவதென்று!'' என்று தலையில் நறுக்கென்று இன்னொரு குட்டுக் குட்டிவிட்டு, ''இந்தப் பாழும் கிரிக்கெட் பைத்தியம் என்று ஊரை விட்டு ஒழியப் போகிறதோ அன்றுதான் பசங்கள் உருப்படப் போகிறார்கள். நாளைக்கு வருகிறேன், உங்கள் ஹெட்மாஸ்டரிடம். அவரிடம் சொல்லித் தோலை உரித்துவிடச் சொல்கிறேன்'' என்று உறுமிக்கொண்டே மாடிக்குச் சென்றுவிட்டார்.

''ஏண்டா இப்படி! சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறாய்? உடம்புக்கு வந்தால் யார் படுகிறது? காலையில் பத்து மணிக்கு வீட்டை விட்டுப் போனவன் ஒரு நாள் பூராவும் வெயிலில் விளையாடிவிட்டு வந்தால், அந்த உடம்பு என்னத்துக்கு ஆகும்? நீயே சொல், பார்க்கலாம்!'' என்று அம்மா சமாதானம் சொல்லி என் அழுகையை நிறுத்தப் பார்த்தாள்.

கன்னத்திலும் முதுகிலும் கை வைக்காமல் அந்த மட்டோடு விட்டாரே என்று ஆறுதல் அடைந்தேன்.

இந்தச் சம்பவம் நடந்த மூன்று வாரத்துக்குப் பிறகு-

அப்பாவுக்கு 104 டிகிரி ஜுரம். முதலில் இரண்டு நாள் ரிக்ஷாவில் டாக்டர் வீட்டுக்குப் போய்வந்தார். மூன்றாவது நாள் படுக்கையை விட்டே எழுந்திருக்கச் சாத்தியமில்லாமல் வீட்டுக்கு வந்து பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. பத்து இன்ஜெக்ஷனுக்கு மேல் செய்தாகிவிட்டது. 'இன்னும் இரண்டு இஞ்ஜெக்ஷனில்

சரியாகிவிடும்! இன்னும் ஒரே இன்ஜெக்ஷன் தான்' என்று சொல்லிக்கொண்டு வந்த டாக்டர், "இது ஒன்றுக்கும் கட்டுப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. ஜெனரல் ஆஸ்பத்திரியில், 'அட்மிட்' செய்து விடுவதுதான் நல்லது. அதுவும் தாமதிக்கக் கூடாது. மூளைக் கொதிப்பு பலமாய் இருக்கிறது" என்று சொல்லிவிட்டார்.

பிறகு ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்தோம். ஒரு மாதம் படுக்கையில் இருந்தார். நடுவில் பிழைப்பது சந்தேசம் என்றுகூடச் சொல்லிவிட்டார்கள். கடைசியில் கடவுள் புண்ணியத்தில் பிழைத்தது புனர்ஜன்மம் என்ருகி வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தோம்.

ஜுரத்துக்குக் காரணம் என்னவென்று கேட்கிறீர்களா?

பூகோள உபாத்தியாயர்: டேய் கிட்டு, கிரீஸ் எங்கே இருக்கிறது, உனக்குத் தெரியுமா?

கிட்டு: ஓ, தெரியுமே! பாபு சைகிள் ஷாப்பில், ஸார்!

—S. ரங்கநாயகி, (R. 364.)

சென்னையில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச்தான். நான்கு தினங்களும் அப்பா விடாமல் பார்த்துவிட்டு வந்தார். அந்த வெயிலில் ஒரு நாள் உட்கார்ந்து பார்ப்பதே பெரிய விஷயம். நான்கு நாளும் விடாமல் பார்க்கவே மூளைக் கொதிப்பு ஏற்பட்டு ஜுரம் வந்துவிட்டது. மாட்ச் பார்க்க டிக்கெட் செலவு கிடக்கட்டும். வைத்தியத்துக்காக முன்னூறு ரூபாய் செலவு!

அதற்கு முந்தினமாதம் குழந்தையின் ஆண்டு - நிறைவுக்காகப் பக்கத்துத் தெரு பிரணதார்த்தியிடம் பத்து ரூபாய், பத்து தினங்களில் கொடுத்துவிடுகிறேன் என்று கடன் வாங்கினுர். அவர் பாக்கியை வசூலிக்க நடையாய் நடக்கிருர்! அவருக்குக் கொடுக்கப் பணம் கிடைக்கமாட்டேன் என்கிறது! மாட்சுக்கு மட்டும் எப்படியோ கிடைத்துவிடுகிறது!

'மாட்ச்' பார்க்கட்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. அதைச் சிறுவர்கள் பார்த்தால் ஒரு நியாயம், பெரியவர்கள் பார்த்தால் ஒரு நியாயமா என்று கேட்கிறேன்!

அதுகூட எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை! 'பரீக்ஷை நெருங்கிக்கொண்டிருக்கிறது. கிரிக்கெட் என்னடா வேண்டியிருக்கிறது?' என்று அன்று என்னைச் சொல்லிக் கண்டித்திருந்தால் நான் வாயைத் திறக்கவே போகிறதில்லை. நான் வெயிலில் ஆடினுல் உடம்புக்கு ஆகாது என்று சொன்னவர், இவர் நான்கு நாட்கள் வெயிலில் ஆட்டம் பார்த்துவிட்டு வந்தது எந்த நியாயத்தில் சேர்ந்தது என்றுதான் கேட்கிறேன்! இவருக்கு மட்டும் உடம்புக்கு ஆகுமோ?

பொழுதுபோக்கு

ஆர். மணி

இடமிருந்து வலம்: 1. திரவப் பொருளிலேயே இது அதிகக் கனமுடையது. 3. ஒரே வார்த்தை; இரண்டு பொருள்கள்: சிரிப்பு, அணிகலன். 5. '......'என்றதும் வாயில் ஜலம் ஊறும். 6. உலகம். 7. தமிழ் மாதத்தில் ஒன்று. 9. நாயகன். 10. சூரியன். 15. லேவாதேவி செய்பவர்களுக்கு இதுதான் முக்கியம். 13. கம்பம் திரும்பியிருக்கிறது. 16. இதுதான் பஞ்சமாயிருக்கிறது இந்தியாவில். 17. அவசரம் கலந்திருக்கிறது.

மேலிருந்து கீழ்: 1. ஆஸ்திரேலியாவில் கிடைக்கும் பாலை இதுவாகச் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். 2. இதிலும் சாப்பிடலாம். 3. இதை அதிகம் வளரவிடக் கூடாது. 4. பிரதிப் பிரயோஜனம். 7. பள்ளியில் படிக்கும் பையன். 8. பார்வதியின் கணவர். 9. இந்தத் தமிழ் வருஷம் போய் நந்தன பிறந்திருக்கிறது. 11. இது நடந்தால் ஊரே ரகளைப் படும். 12. உங்கள் அபிமான பத்திரிகை. 13. பூஜையின்போது மலர்......வார்கள். 15. .... பஞ்சமும் உணவுப் பஞ்சத்தோடு போட்டி போடுகிறது.

(விடைகள் கடைசிப் பக்கத்தில்)

என்ன வேண்டும்?

அழ. வள்ளியப்பா

எங்கள் பள்ளியின் முன்னாலே
இருந்தது, சிறிய கடைஒன்று.
அந்தக் கடையில் புதிதாக
அன்றொரு பொம்மை இருந்ததனால்,
அதனைப் பார்க்க மாணவர்கள்
அங்கே கூட்டம் போட்டனரே.
நந்தன், கோபு, சாம்புவுடன்
நானும் சென்றேன், கடைமுன்னே.
"வேண்டிய தென்ன, சொல்லிடுவீர்?
வீணாய்க் கூட்டம் போடாதீர்"
என்றே அந்தக் கடைக்காரர்
எங்களைப் பார்த்துக் கூறினரே.
பையில் தம்படி இல்லாது
பார்த்துக் கொண்டே நாங்களுமே
அங்கே நின்றோம். அப்பொழுது,
அவசரமாக ஒரு பையன்
ஓடி வந்தான். அவன்கையை
உற்றுப் பார்த்தார் கடைக்காரர்.

வந்தவன் கையில் ஒருரூபாய்
வட்ட மாக இருந்திடவே,
“வெட்டிக் கூட்டம் போடாமல்
விலகிப் போங்கள், கழுதைகளா”
என்றே கூறிக் கோபமுடன்
எங்களைப் பிடித்துத் தள்ளிவிட்டு,
பணத்துடன் வந்த பையனையே
பரிவுடன் அருகில் வரவேற்று,
“என்னடா தம்பி வேண்டு”மென
இதயமாய்க் கேட்டார். கேட்டதுமே,
பணத்தை நீட்டினான் பையனுமே.
பக்குவ மாகக் கூறினனே:
“அவசரம்; அவசியம்; ஆனதனால்,
அப்பா இங்கே அனுப்பினரே.
சில்லறை வேண்டும் ரூபாய்க்கு.
சீக்கிரம் தருவீர் இப்பொழுதே.”
—இதனைக் கேட்ட நாங்களெலாம்
இடிஇடி யெனவே சிரித்தோமே!
ஏமாற் றத்தால் கடைக்காரர்
எங்களைப் பார்த்து முறைத்தனரே!





ஸ்நான விளையாட்டு

எஸ். வி. ஆர்.

இந்த விளையாட்டுக்கு மொத்தம் பதினாறு பேருக்கு மேல் இருக்கவேண்டும். பையன்கள் முதலில் இரு கட்சி களாகப் பிரிந்து, தனித் தனியாக நிற்கவேண்டும். இரு கட்சிக்கும் சமதூரத்தில் (15 கஜ தூரத்திற்குமேல்) ஒரு பந்தை வைத்துவிடவேண்டும்.

தலைவன் ஊதியவுடன் இரண்டு கட்சிப் பையன்களும் ஓடி அந்தப் பந்தை யார் முதலில் எடுக்கிறானோ அவன் மீதிப் பையன்களிடம் போய், "நான் காவேரிக்குப் போகிறேன். ஆற்றில்போட உங்களிடம் ஏதாவது சாமான் இருந்தால் கொடுங்கள்" என்று கேட்கவேண்டும்.

இருபது கஜ தூரத்தில் போடப்பட்டிருக்கும் வட்டத்தில் ஸ்நானத்துக்குக் கிளம்பின பையன் சாமான் களை எல்லாம் போட்டுவிட்டுத் திரும்பி வந்துவிட வேண்டும். தலைவன் விசில் ஊதியவுடன் ஓடி அந்த வட்டத்திலுள்ள சாமான்களில் அவரவர்கள் சாமான்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு தங்கள் இடத்துக்கு வந்து விடவேண்டும். மற்றவர் சாமானை அவசரத்தில் எடுத்து வந்தவன் அவுட். எந்தக் கட்சி முதலில் தங்கள் இடத்துக்கு வருகிறார்களோ அவர்களுக்கு 20 பாயிண்ட். ஆட்டக் கடைசியில் யார் முதலில் 200 பாயிண்ட் எடுக்கிறார்களோ அந்தக் கட்சிதான் ஜயித்த கட்சி.

நினைத்ததும் நடந்ததும்

குகப்ரியை

ஒரு சமயம் பாண்டவர்களை அவமானப்படுத்த விரும்பினான் துரியோதனன். துர்வாசர் என்ற முனிவரைப் பற்றிய நினைவு அவனுக்கு வந்தது. அவரைத் தருமரிடம் அனுப்பினால் எந்தக் காரணத்தினாலாவது அவருக்குக் கோபம் வரும். அவர்களை ஏதாவது சபிக்கட்டுமே என்று அவனுக்குத் தோன்றிற்று. உடனே ஒரு தூதனை அனுப்பி அவர் எங்கிருக்கிறார் என்று அறிந்து வரும்படி அனுப்பினான்.

முனிவர் துர்வாசர் மிகுந்த கோபக்காரர். சின்னஞ்சிறு விஷயங்களுக்கெல்லாம் பிரமாத கோபம் வந்துவிடும். ஆகவே எல்லாருக்கும் அவரைக் கண்டால் நடுக்கம். அவர் நல்லபடியாகப் போய்ச் சேரவேண்டுமே என்று நினைப்பார்கள். அவர் ஏதோ வனத்திலே ஒரு வேள்வி செய்யப் போவதாகச் செய்தியைக் கொண்டு வந்தான் தூதன்.

துரியோதனனுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. அந்த யாகத்துக்கு உதவிகள் செய்வதற்கு ஆள் வேண்டுமல்லவா? இந்தப் பஞ்ச பாண்டவர்களுள் ஒருவரைச் சிபாரிசு செய்யலாம் என்று நினைத்தவனாய் அவர் இருப்பிடம் சென்றான். துர்வாசர் ஜபம் செய்துகொண்டிருந்தார். துரியோதனன் அவரிடம் நயமாகப் பேசி, தருமரிடம் போய்ப் பணிவிடை செய்ய ஓர் ஆள் வேண்டுமென்று கேளுங்கள் என்று சொல்லிவைத்தான். அவரும் சரி என்றார்.

துரியோதனன் ஆனந்த மிகுதியினால் குதித்தான். இவர் ஏதாவது வேலையிடுவார். அதில் தவறு நேராமல் இராது. இவர் கோபித்துச் சபித்துவிடுவார் என்று நினைத்தான்.



துர்வாசர் தருமரிடம் சென்று தனக்குப் பணிவிடை செய்ய ஒரு நல்ல ஆள் தேவை என்று கேட்டார். கபடமில்லாத தருமபுத்திரர், "ஆகா! அப்படியே அனுப்பிவைக்கிறேன். அவனால் வேலையில்லாமல் சும்மா இருக்கமுடியாது. ஆகவே நீங்கள் ஓயாமல் வேலை கொடுத்துக்கொண்டே இருக்கலாம்" என்று சொல்லிவிட்டு உரத்த குரலில், "தம்பி!" என்று அழைத்தார்.

கதாயுதத்துடன் சம்பிரமாய் மலைபோல வந்து நின்றான் பீமன். முனிவரை வணங்கிவிட்டுத் தன் தமையனையும் வணங்கினான். "இவருக்குப் பணிவிடை செய்ய வேணுமாம்" என்றார் தருமர்.

இதோ நான் போகிறேன் என்று கிளம்பினான் பீமசேனன்.

துர்வாசர் முன்னே நடந்தார். பீமன் கதையைத் தோளில் சாத்திக்கொண்டு நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டே பின்னே நடந்தான். அழகிய ஆரண்யத்தின் நடுவிலே யுள்ள ஒரு சிறு குடிசையை அடைந்தார்கள்.

"இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று மிகுந்த பயபக்தியுடன் கேட்டான் பீமன்.

"இப்பொழுது ஒன்றும் வேண்டாம். படுத்துக்கொள். நாளைக் காலையிலே நதிக்குப் போகுமுன் பல் தேய்க்க ஆலங்குச்சிகளாவது வேலங்குச்சிகளாவது கொண்டுவர வேண்டும்" என்றார் முனிவர்.

"சரி. அருணோதயத்துக்கு முன் கொண்டுவந்து விடுகிறேன்."

"காலையில் எழுந்தவுடன் நதியிலிருந்து தீர்த்தம் எடுத்துவர வேண்டும்" என்றார் துர்வாச மகரிஷி.

"அதற்கென்ன? அப்படியே செய்துவிடுகிறேன்" என்று மிகுந்த பணிவுடன் சொன்னான் பீமன்.

ஃ ஃ ஃ

விடியற்காலம் ஆசிரமத்தைச் சூழ்ந்துள்ள மல்லிகைச் செடிகளெல்லாம் 'கொல்'லென்று மலர்ந்திருந்தன. அவைகளின் வாசனை ஆசிரமம் முழுவதும் நிறைந்திருந்தது. ஆசிரமத்தின் வெளிப்புறத்தேயுள்ள ஒட்டுத் திண்ணையிலே படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் பீமன். அப்பொழுதே கண் விழித்தார் துர்வாசர். மெதுவாகச் சிரித்துக் கொண்டார். பீமசேனன் விடும் மெல்லிய குறட்டை ஓசை அவருக்குத் தெளிவாய்க் கேட்டது. "ஐயோ பாவம்! ராஜகுமாரன் விடியற்காலையில் எழுந்து பழக்கமில்லை. இவன் பற்குச்சி கொண்டு வந்து, நான் தேய்த்து முடிப்பதற்குள் சூரியன் உச்சிக்கு வந்துவிடுவான்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்றார்.

அவர் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. ஆசிரமத்துக்கு வெகு சமீபத்தில் சலசலவென்று ஒரு நதி ஓடுவது போல் ஓசை கேட்டது. இதென்ன ஓசை என்று நினைத்தவராய் அவர் வெளியே வந்தார். ஆசிரமத்தின் எதிரேயுள்ள புல்வெளியிலே ஒரு கால்வாய் ஓடிக் கொண்டிருந்தது. கங்கையின் தண்ணீர் அதன் வழியே கரைபுரள ஓடி அடுத்துள்ள மற்றொரு நதிக்குச் சென்றுகொண் டிருந்தது. 'இதென்ன மந்திரமா மாயமா? நேற்றுத் தரிசு நிலமாய் இருந்த இந்தப் புல்மேடு இன்று நீரோடையின் கரையாகி விட்

டதே!' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டே மறுபுறம் திரும்பினர் துர்வாசர்.

அங்கே பிரம்மாண்டமான ஓர் ஆலமரம் வேரோடு பிடுங்கிவந்து வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுதே பெயர்த்து வந்ததாகையால் பசுமை குன்றாமல் இலைகளும் பூக்களும் பழங்களுமாய்க் காட்சி தந்தது. அதில் கூடு கட்டி வசித்து வந்த பறவைகள் தம்முடைய 'கலகல'வென்ற சப்தத்தினால் உதயகீதம் பாடிச் சூரிய பகவானை வரவேற்றுக்கொண்டிருந்தன. திகைத்துப் போனார் துர்வாசர்.

இந்தச் செயலைப் பீமசேனன் தான் செய்திருக்கவேண்டும் என்று நினைத்தவராய், "பீமசேனா!" என்று அழைத்தார். பீமன் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். கண் விழித்த பிறகுதான் ஆசிரமத்திலிருப்பது நினைவு வந்தது. எழுந்தான். "முனிபுங்கவரே! இதோ பர்ணசாலைகளுக்காக ஆலமரத்தையே கொணர்ந்துவிட்டேன். இரண்டொரு வருஷங்களுக்குப் போதும். நீங்கள் நதியைத் தேடிச் செல்லவேண்டிய அவசியமில்லை. நதியின் தடத்தையே மாற்றி இந்தக் கால்வாயைக் கொண்டுவந்தேன். இரவு நெடுநேரமாயிற்று. அதனால்தான் அயர்ந்து தூங்கிவிட்டேன். மன்னிக்கவேண்டும்" என்றான்.

துர்வாசர் பாடு தடுமாற்றமாகிவிட்டது. 'இவனுக்கு ஓயாமல் வேலை கொடுக்கவேண்டும்என்றாரே தர்மபுத்திரர். இப்படி வேலை செய்பவனுக்கு நாம் எங்கிருந்து வேலை கொடுக்க முடியும்? ஆகவே ஆசீர்வாதம்செய்து வழியனுப்பி விடுவது தான் நல்லது' என்று நினைத்தார்.

உடனே மிகவும் நயமான குரலில், "பீமசேனா, உன் புத்தி சாதுர்யத்தை மெச்சினேன். இவ்வளவு பலமும் புத்தி கூர்மையும் உள்ள நீ எப்பொழுதும் வெற்றியே பெறுவாய். பேரோடும் புகழோடும் வெகுகாலம் வாழவேண்டுமென்று ஆசீர்வதிக்கிறேன். தருமருக்கும் உன் மற்ற சகோதரர்களுக்கும் ஆசி கூறுகிறேன். நீ போய் வரலாம்" என்றார்.

பீமன் செய்த சேவகம் துரியோதனன் செவிகளுக்கு எட்டிற்று. 'அடாடா, சபிப்பார் என்றல்லவா அனுப்பினோம்! அவன் ஆசி பெற்று வந்துவிட்டானே!' என்று மனம் புழுங்கினான்.

பாலுவின் யோசனை

ஏ. எஸ். ராகவன்

[சுந்து கவலையுடன் உட்கார்ந்துகொண்டிருக்கிறான். அவனுடைய நண்பன் பாலு வருகிறான்.

பாலு:—டே சுந்து! ஏண்டா இப்படி உட்கார்ந்துகொண்டிருக்கே? பால் போலப் பொழிகிற வெயில் வீணாகிறதே. வாடா, கோலி ஆடப் போகலாம்!

சுந்து: நான் வரவில்லை.

பாலு: ஏனாம்?

சுந்து: எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. என்ன விளையாட்டு, என்ன உலகம்!

பாலு: டேய், டேய்! இந்த மாதிரி எல்லாம் பேசறத்துக்கு இன்னும் ரொம்ப நாள் ஆகணும்.. பயப்படாதே, நானும் அப்போது உன்னுடன் வந்து விடுகிறேன். இரண்டுபேரும் 'கிருஷ்ணா, ராமா' என்று சொல்லிண்டு, காசிக்குப் போவோம்.

சுந்து: ஏன்? இப்பவே போயிட்டாத்தான் என்ன?.... டே, பாலு, நீ கொடுத்து வச்சவன். உங்கப்பா உன்னை ஒண்ணும் சொல்றதில்லை. போதாக்குறைக்குச் செலவுக்குப் பணமும் தருகிறார். ஆனா எங்கப்பாவோ....

பாலு: அடேடே, அதுவா விஷயம்?.. (கொஞ்சம் யோசனை செய்துவிட்டு)..சரி, அதை நான் கவனிச்சுக்கறேன். நீ புறப்படு.

சுந்து: அவர் கொடுத்த அடியிலே முதுகு, இதோ பாரு, அப்பளமா நசுங்கிப்போச்சு!..நான் எதுத்துப் பேசறேனாம். அண்ணா வேறே வத்தி வச்சுட்டான். நேத்து அவன் பூட்ஸுக்குச் சரியாப் 'பாலிஷ்' போடலேன்னு அவனுக்குக் கோபம். நான்தான் இந்த வீட்டில் இளிச்சவாயண்டா!

பாலு: சேச்சே, மனசை அலட்டிக்காதே! புறப்படு.

சுந்து: அப்புறம் அக்கா ஆர் மோனியத்தை வச்சிண்டு அலறிண்டிருந்தா. அவளைப் பார்க்க நாளைக்கு யாரோ வராளாம். அப்போ பாடணும்னு இப்பவே பிடிச்சுத் தயார் பண்றாள். நான் சொன்னேன், 'அக்கா, நீ இப்படிப் பாடினாயானால் நிச்சயம் பிடிக்கலேன்னு சொல்லிடுவா..நீ பாடாமயே இருந்துடேன்' என்று. அதுக்கும் சேர்த்து அப்பா நன்றாக அடிச்சுவிட்டார்.

-600 008

பாலு: ப...ம ரஸிகன் நீ! கிளம்புடா..நான் ...சொல்ற யோசனைப்படி நட. அப்புறம் எல்லாம் சரியாயிடும்.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 2.

[சுந்துவின் வீடு. அப்பா ஜயராம ஐயர் கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அம்மா பாகீரதி சமையலறையில் இருக்கிறாள்.]

ஜயராம ஐயர்: இந்த சுந்துப் பயலை எங்கே காணோம்?

பாகீரதி: எங்கேயாவது விளையாடப் போயிருப்பான்!

ஜய: விளையாட நேரம், பொழுது கிடையாதா?....இன்னைக்கு அவர்களெல்லாம் பெண் பார்க்க வருவார்கள்....வீட்டிலே இருந்து கடை கண்ணிக்குப் போனால் என்ன?

பாகீ: ஆமாம், அவன் தான் பிரமாத காரியம் செய்து விடுவானாக்கும்!

ஜய: சரி, சரி. உன் பிள்ளைக்குப் பரிந்து பேசவந்துவிட்டாயோ?

பாகீ: நான் ஒன்றும் பரிந்து பேசவரவில்லை....உங்க இஷ்டம் போலவே செய்யுங்கள். நன்றாக அடியுங்கள்!

ஜய: அடியாத மாடு படியாது, தெரியுமா?

(சுந்துவின் அக்கா கமலம் ஓடி வருகிறாள்.)

கமலம்: அப்பா, அப்பா.... கோடி வீட்டு ராமு எங்கேயோ ஓடிப் போய்விட்டானாம். காலையில் அவனை அவனுடைய அப்பா நன்றாக உதைத்துவிட்டாராம்.

ஜய: எங்கே போயிருப்பான்? தன்னால் வந்துவிடுவான்.

பாகீ: இவர்மட்டும் என்ன? பாவம், காலையில் பச்சைக் குழந்தையை நையப் புடைத்துவிட்டார். இவனும் ராமுமாதிரி எங்கேயாவது ஓடிப்போய் விட்டால்..?

ஜய: போனால் போகட்டுமே! ....(மனசுக்குள்) இந்தப் பயலையும் காணோமே! எங்காவது போய் விட்டானோ? (கமலத்தை நோக்கி உரக்க) கமலா, சுந்து எங்கே போனான்? நீ பார்த்தாயா?

கம: இல்லையே, காலையில் போனவன். இன்னமும் சாதம் கூடச் சாப்பிடவில்லை....இல்லையா, அம்மா?

பாகீ: ஆமாம்..எங்கேயாவது விளையாடறான், பாரேன்

கம: இதோ போய்ப் பார்க்கிறேன்....(முணுமுணுக்கிறாள்) நல்ல பிள்ளை இவன்!....இன்னைக்கு அவர்களெல்லாம் வருவார்கள். அதற்குள் என் 'மேக்-அப்' கலைந்துவிடும் போலிருக்கே.

(போகிறாள்.)

ஜய: எங்கே போயிருப்பான்?

பாகீ: நன்றாய் அடித்தீர்கள்.. எங்கே போனானோ? குழந்தையைக் காணோமே!

(வாசற்புறமிருந்து 'சுந்து, சுந்து!' என்று பாலுவின் குரல் கேட்கிறது.)

ஜய: யாரடா அது?

பாலு: நான்தான், மாமா. சுந்து இல்லையா?

ஜய: பாலுவா?..உள்ளே வா.. சுந்து உன்னுடன் விளையாட வரவில்லையா?

பாகீ: எப்போது பார்த்தாலும் இந்த இரண்டு பேரும்தான் ராம லட்சுமணாள் போல ஒன்றாய்த் திரிவார்கள். எண்டாப்பா, அவனை நீ பார்க்கவே இல்லையா?

பாலு: இல்லையே, மாமி.... காலையிலிருந்து ஆளையே கண்ணிலே காணோமே; பார்க்கலாம்னு வந்தேன். வேற எங்கே போயிருப்பான்?

பாகீ: அது என்னமோ .. எண்டாப்பா, உன்னை உங்கப்பா அடிக்கிறதுண்டா?

பாலு: ஊஹூம், தொடமாட்டார்.

பாகீ: பார்த்துக் கொள்ளுங்கள்! எல்லார் வீட்டிலும் இப்படியா நடக்கிறது?.. ....என் கண்ணே சுந்து....!

ஜய: சரி, சரி, நீ பிலாக்கணம் வைக்காதே .... எல்லாம் வந்து சேருவான்.

பாலு: மாமா, இப்போதான் ஞாபகம் வந்தது.

ஜய: என்னடா, என்ன?

பாலு: நேத்து ராத்திரி பேசிண்டிருக்கச்சே, அவன் ரொம்ப வருத்தத்தோட, 'எனக்கு ஒண்ணுமே பிடிக்கலேடா. எங்கப்பா அடிக்கிறார். நான் எங்கே யாவது ஓடிப் போயிடப் போகிறேன்'னு சொன்னான்.

ஜய: நெஜமாவா?

பாலு: ஆமாம், மாமா.

பாகீ: எண்டாப்பா, நீ அதைக் கேட்டுண்டு பேசாமலா இருந்தே?

பாலு: பேசாமலா மாமி, இருப்பேன்? 'போடா, அசடே. அடிக்கிற கைதாண்டா அணைக்கும். உங்கப்பாதானே அடிச்சா? இதுக்காக நீ இப்படி வருத்தப்படலாமா?' இன்னு சொன்னேன்.

பாகீ: நீ நல்ல புத்திசாலி.... உம்....அப்புறம்?

பாலு: அவன் திரும்பத் திரும்ப அதையே சொன்னான்.

'இந்த வீட்டிலே நான் என்ருல் யாருக்கும் லட்சியம் இல்லே. அண்ணு, அக்கா எல்லாரும் திட்டுரு!' அப்படீன்னுன்.

பாகீ: கேட்டுக்குங்கோ, குழந்தை மனசு வெறுத்து எங்கேயோ ஓடிப் போயிட்டான். சுந்து, கண்ணே சுந்து, ஆயிரந் தவம் கிடந்தாலும்....

[வாசல்புறம் ஒரு குதிரை வண்டி வந்து நிற்கிறது. பெண் பார்க்கச் சம்பந்தி மனிதர்கள் வந்துவிட்டார்கள்.]

ஐய: (குழப்பத்துடன்) வாருங்கோ....

[கமலம் குடு குடு வென்று ஓடுகிருள் உள்புறம்.]

பாகீ: அடடா, அடுப்பிலே எல்லாம் அப்படியே கின்னு போச்சு. எனக்கு ஒண்ணும் ஓடல்லே.... அந்தப் பிள்ளையைக் காணேமே?

கம: ஏனம்மா, என் முகத்திலே பௌடர் கலேஞ்சு போச்சா?

பாகீ: எல்லாம் சரியாத்தான் இருக்கு, போ!

கம: அம்மா,....வந்து.... நான் பாடல்லே, அம்மா.... எனக்கு வெட்கமா இருக்கு.

பாகீ: சரி, பாடவேண்டாம்... எனக்கு வேலே இருக்கு, தலேக்கு மேலே....நீ போய் முகத்தை மட்டும் அலம்பிக்கொள்.

[கூடத்தில் ஜயராம ஐயர் சம்பந்தியுடன் பேசுகிருர்.]

ஐய: இப்ப வந்து..அதாவது ..நம்ப பையன் சுந்துவைக் காலேயிலேருந்து காணேம்!

சம்: அடடா!.......எங்கே போயிருப்பான்?

ஐய: உம்....அதுதான் தெரியல்லே....சரி, யாரங்கே?.... பாகிரதி, டிபன் கொண்டுவா.

சம்: இருக்கட்டும், பரவாயில்லே.

ஐய: ஹி, ஹி....பரவாயில்லே.

[கமலா கூடத்திலிருக்கும் மாப்பிள்ளையைத் தன் அறை ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டு நிற்கிருள்.]

கம: நல்ல வேளே, அம்மா பாடவேண்டாம்னு சொல்லிவிட்டாள்....எனக்கும் குரல் சரியாத்தான் இல்லே. தொண்டை கட்டிண்டு, சரியாப் பேசவே முடியாத போது, பாடறது எப்படி?

[இப்போது பீரோவுக்குப் பின்புறம் ஏதோ சத்தம் கேட்கிறது.]

கம: (திடுக்கிட்டு) யாரது?.. ஓ....பூனேயா? இந்த வீட்டில் உள்ள தொந்தரவு கொஞ்சமல்ல!

['மியாவ், மியாவ்' என்ற சத்தம் பீரோவுக்குப் பின்னலிருந்து வருகிறது.]

கம: கூ..கூ!

தூரல்: 'மியாவ், மியாவ்'

கம: அட, அபசகுனம்!

தூரல்: உன் பாட்டைவிட என்..

கம: அட தடியா, சுந்துப் பயலே!.... இங்கேயா இருக்கே?

[சுந்து வெளியே வருகிருன்.]

சுந்து: அக்கா, அக்கா.... இப்போ எதுவும் சொல்லிப் பிடாதே.... நான் இங்கேயே இருக்கேன்....

கம: சரி.

சுந்து: அது சரி, நீ பாட மாட்டியே?

கம: சீ, போக்கிரி!

சுந்து: அது சரி, அக்கா.... கூடத்திலே யாரை அப்படி உற்று உற்றுப் பாக்கறே?

கம: அம்மா, இங்கே பாரேன், சுந்து என்னைக் கேலி பண்ருன்!

பாகீ: யாரு சுந்துவா?.... எங்கே இருக்கான்?

ஜய: சுந்துவா? எங்கே?

(எல்லோரும் உள்ளே ஓடி வருகிருர்கள்.)

சுந்: நான் ஒண்ணும் பண்ணலே, அப்பா....அக்கா கூடத்திலே மாப்பிள்ளையையே பாத்துண்டு நின்ணு.

ஜய: போக்கிரிப் பயலே! எங்கேடா போனே? (சம்பந்தியை நோக்கிப் பெருமையுடன்) பையன் ரொம்ப சூடிகை!

சுந்: ஆமாம், உதை வாங்கறதிலும்தான்.

மாப்பிள்ளை: குழந்தைகளை அடிக்கலாமா?..சுந்து, இங்கேவா. உனக்கு ஒரு வெகுமதி தரப் போறேன். என்ன, சொல்லு?

சுந்: முதுகிலே 'பளார்'!

மாப்: இல்லே, இந்தா!

சுந்: பௌண்டன் பேஞ எனக்கா? இல்லே அக்காவுக்கா?

ஜய: சீ! போக்கிரி!

(பாலு வருகிருன். இருவரும் பலகாரம் சாப்பிடப்போகிருர்கள்.)

சுந்து: பாலு, உன் யோசனை பலிச்சுதுடா. என்னைக் காணேம் என்றதும் அப்பா தவிச்சுப் போயிட்டார்.

பாலு: இனிமே உன்னை அடிக்க மாட்டா. ஆஞ நீ மட்டும் உன் நாக்கைக் கொஞ்சம் அடக்கிக் கணும்.

சுந்து: ஆகட்டும்...... ஆஞ நிபந்தனை ரொம்பக் கஷ்டமானது. சேமியா கேசரியும், பஜ்ஜியும் இலையிலே பார்த்தபிறகு எப்படிடா நாக்கை இழுத்துக்கறது?

பாலு: உன் குறும்புத்தனம் போகல்லே!

(கமலா வருகிருள்)

கமலா: அம்மா, இவன் பீரோவுக்குப் பின்னுலேதான் ஒளிஞ்சிண்டிருந்தான்.

சுந்து: ஆமாம். அக்காவும் ஜன்னல் வழியாகத்தான் அத்திம்பேரைப் பார்த்திண்டிருந்தாள்.

(எல்லாரும் சிரிக்கிருர்கள்.)

[திரை]

எழுது, அனுப்பு

பி. என். குமார்

சிறுவன் ஒருவன் ஒரு பத்திரிகையைப் பிரித்துப் படிக்கிறான். அதில் அவன் வகுப்பு நண்பன் எழுதிய ஒரு கதை வெளிவந்திருக்கிறது. அவன் மனசு குறுகுறுக்கிறது. ஆத்திரத்தினால் அல்ல; ஏதோ ஓர் உணர்ச்சியினால்!

அந்தச் சிறுவனும் அநேக கதை, கட்டுரைகள் எழுதுகிறான். அவை அவன் மனத்துக்குத் திருப்தியையும் ஆனந்தத்தையும் அளிக்கின்றன.

ஒவ்வொன்றும் பல சிறுவர் பத்திரிகைக் காரியாலயங்களைத் தவறாமல் அடைகின்றன.

அவன் நண்பன் எழுதிய ஒரு கதை வந்திருக்கிறது! அவன் எழுதிய கதைகளையும் நண்பன் எழுதிய அந்தக் கதையையும் ஒப்பிட்டுப் பார்த்த பொழுது, 'ஹூம்! அந்தக் கதை கொஞ்சமும் நன்றாக இல்லையே! நாம் நன்றாக, அழகாக ஒரு கதை எழுதி அனுப்பினால் யார் போடுகிறார்கள்?... அதிருஷ்டம் அவ்வளவுதான்' என்றுதான் மனசு குறுகுறுக்கிறது!

உடனே, 'இதென்ன! நாமும் நல்லதாக ஒரு கதை எழுதி அனுப்பினால் ஏன் வராது, இந்த மோசமான கதையே பிரசுரிக்கப்படும் போது?' என்று தோன்றிற்று.

அவன் கிடு கிடுவென்று கதையோ கட்டுரையோ எழுதுகிறான். பத்திரிகைக்கு அனுப்புகிறான்.

அவன் உள்ளத்தில் மனக் கோட்டைகள் பிரமாதமாக எழுகின்றன.

* * *

மொத்தத்தில் நானும் அந்த வகைதான்! காகிதம் காகிதமாக எழுதித் தள்ளுவேன்! மீண்டும் ஒரு முறை படித்துப் பார்ப்பேன். கதை நன்றாயிருக்கிறது என்று திருப்தியுடன் பத்திரிகைக்கு அனுப்புவேன்.

வருவது..? சந்தேகம்தான்! —ஏன்? வரவே வராது!

ஆயினும் சில சமயங்களில் எனக்குப் பிடிக்காத ஒரு கதையோ கட்டுரையோ ஒரு பத்திரிகையில் வந்தால், 'எழுது, அனுப்பு!' என ஓர் உணர்ச்சி என்னைத் தூண்டும். எழுதுவேன்; அனுப்புவேன். வராது; நிச்சயமாய்!

நான் எழுதிய இது (கதையோ, கட்டுரையோ?) படிக்கச் சுவாரஸ்யமாயிருக்கிறதோ, என்னவோ? கருத்து இல்லை! ஒன்றும் இல்லை! ஆயினும் இந்த எண்ணங்கள் சிறுவர்களின் உள்ளத்தில் தோன்றும் என்பது உண்மை அல்லவா?

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) ‘மூட்டை’



விசித்திரக் குள்ளன்

விஜயா

ஓர் ஊரில் ஓர் ஏழைக் கிழவி இருந்தாள். அவள் சாப்பாடே இல்லாமல் பட்டினி கிடந்து வாடினாள். ஏதாவது அகப்படுமோ என்று தினம் குப்பை மேடுகளை எல்லாம் துழாவிப் பார்ப்பாள். ஆனால் ஒன்றுமே கிடைக்காது.

ஒரு நாள் ஒரு குப்பை மேட்டில் அவள் ஏதாவது அகப்படுமா என்று தேடிக்கொண்டிருக்கும்போது, "ஏ பாட்டி, அம்மா.. இதோ பார், என்னை எடுத்துக் கொண்டுபோய் உன் குடிசைப் பக்கத்தில் நடு.. உனக்கு அப்புறம் வேண்டிய பொருள் கிடைக்கும்.." என்று ஒரு கீச்சுக் குரல் கேட்டது. கிழவிக்கு, சப்தம் எங்கிருந்து வருகிறதென்று தெரியவே இல்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். திரும்பவும் குரல் வந்தது. "இதோ பார், பாட்டியம்மா.. இங்கே இருக்கிறேன் பார், பூசணி விதை.." என்று சொல்லிற்று.

கிழவி உற்றுப் பார்த்தாள். அங்கே ஒரு பூசணி விதை இருந்தது. உடனே அதை எடுத்துக் கொண்டு சந்தோஷத்தோடு வீட்டுக்கு வந்தாள்.

மறுநாள் காலையில் பூசணி விதையை எடுத்துப் பள்ளத்தில் நடும்போது, "பாட்டி, என்னை மட்டும் நீ நன்றாய்ப் பார்த்துக்கொண்டு, நான் சொல்வதுபோலவே செய்தால் நீ பெரிய பணக்காரி ஆகி விடுவாய்" என்றது. பாட்டியும், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிப் பள்ளத்தை மூடினாள்.

தினம் அந்தப் பூசணி விதையை நட்ட இடத்துக்கு நிறைய தண்ணீர் விட்டுச் செடி முளைத்துவிட்டதா என்றுஆவலுடன் பார்ப்பாள் கிழவி. அவள் எதிர்பார்த்ததுபோல் சீக்கிரமே பூசணி விதை முளைத்து விட்டது. கிழவிக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. தினம் குப்பை மேட்டிலுள்ள சாம்பல், சாணி எல்லாவற்றையும் கொண்டுவந்து செடிக்குப் போட்டாள். செடி நன்றாய்த் தளதளவென்று வளர்ந்தது. பிறகு பூவும் பூத்துக் குலுங்கியது. கிழவிக்குச் சந்தோஷத்தால் புதுத் தெம்பு ஏற்பட்டது. அது மார்கழி மாதமானதால் வீட்டு வாசலில் பூசணிப்பூ வைப்பவர் வீட்டுக்கெல்லாம் பூவைக் கொண்டுபோய் விற்றுக் கொஞ்சம் பணம் சேர்த்தாள். இதற்குள் பூவினடியில் பிஞ்சும் உருவாவதைக் கண்டாள் கிழவி. அவள் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. செடியைத் தன் கண்போல் காத்து வந்தாள். செடி நிறையக் காய்கள் தான்.

காய்கள் பக்குவமடைந்ததும் கிழவி அவைகளைக் கொண்டுபோய் தினம் விற்றுவிட்டு, கிடைத்த துட்டை வைத்துக்கொண்டு கஷ்டமில்லாமல் இருந்தாள்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் கிழவி வழக்கம்போல் பூசணிக் காய் பறிக்க வந்தாள். அப்போது ஒரு காயிடமிருந்து குரல் வந்தது:

"பாட்டி..என்னை இப்பொழுது பறிக்காதே, நான் சொல்லும் போது பறி." கிழவி அந்தக் காயை உற்றுப் பார்த்தாள். அது பளபள வென்று வெள்ளிபோல் மின் னிற்று. "சரி" என்று அந்தக் காயை மட்டும் விட்டு வைத் தாள்.

தினமும் அந்தக் காயிடமிருந்து, பறிக்கும்படி ஏதாவது வார்த்தை வருமா என்று பார்த்துக்கொண் டிருந்தாள் கிழவி. ஆனல் ஒரு மாத மாகியும் ஒரு குரலும் வரவில்லை. கிழவிக்கு ஆவல் தாங்க முடிய வில்லை. ஒரு நாள் அந்தக் காயைப் பறித்துவிட்டாள். தூக்க முடிய வில்லை. அவ்வளவு கனமாக இருந் தது. உடனே, "இதற்குள்ளே என்னதான் இருக்கு, பார்க்க லாமே" என்று அதை நறுக்கவும் ஆரம்பித்தாள்.

அப்போது காயினுள்ளே இருந்து குரல் வந்தது. "பாட்டி..என்ன இது? நான் சொன்னதை மறந்து என்னைப் பறிச்சுட்டியே? இப்போ நறுக்க வேறே ஆரம்பிச்சுட்டே.. மெள்ள....மெள்ள.....என்னைப் பத்திரமா எடுக்கணும்.... மெதுவாக நறுக்கு" என்றது. கிழவி மெதுவாய் நறுக்கினள். தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. அந்த பூசணிக் காயினுள்ளே ஒரு சிறு வெள்ளி வீடு இருந்தது. அதன் பளபளப்பு கிழவியின் கண்களைப் பறித்தது. அவள் அதைப் பார்த் துக்கொண் டிருக்கும்போது அந்தச் சிறு வீட்டுக்குள்ளிருந்து ஒரு குள்ளன் குதித்தான். கிழவி ஆச் சரியத்தால் வாய் திறந்து நின்ருள். அந்தக் குள்ளன் கோபத் தோடு, "என்ன பாட்டி, நான் சொல்லுமுன்பே காயை அறுத்து விட்டாயே, எதற்கு இவ்வளவு அவ சரம்?" என்ருன்.

கிழவி பதில் சொல்லத் தெரியா மல் விழித்தாள். பிறகு குள்ளன், "எனக்கு ஒரு சாபத்தால் இந்தக் கதி வந்தது. நான் இன்னும் கொஞ்ச நாள் இதற்குள்ளேயே இருந்திருந்தால், உனக்கு அந்தக் காயை வெட்ட வேண்டிய சமயத்தைச் சொல்லியிருப்பேன். அப்பொழுது வெட்டியிருந்தால் நான் ஒரு ராஜகுமாரனகவே வெளியே வந்திருப்பேன். அதை நீ கெடுத்து, பாதியிலேயே என்னை வெளியே கொண்டு வந்துவிட்டாய்" என்ருன். கிழவி விசனத்துடன் தலையைக் குனிந்துகொண்டாள். குள்ளன், "சரி..போகட்டும்.... இந்த வீட்டையாவது பத்திரமாகப் பார்த்துக்கொள்....இனி நான் அதில்தான் இருப்பேன்" என்ருன். கிழவி, "ஆகட்டும் அப்பா..உன் பேர் என்ன?" என்ருள் அன்புடன்.

"என் பேர் விசித்திரன்" என்ருன் குள்ளன்.

"அப்பா விசித்திரா..எனக்கோ ஒரு மனுஷாளும் இல்லை; இனி மேல் நீதான் எனக்குச் சகலமும்.. நீ என் குழந்தையப்பா இனிமேல்" என்ருள் கிழவி சந்தோஷத்தோடு.

விசித்திரன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. நேராகத் தன் சிறு வெள்ளி வீட்டுக்குள் சென்று புது உடை அணிந்து வெளியே வந்தான்.

"பாட்டி..என் வீட்டைப் பத் திரமாகப் பாத்துக்கொள்..நான் வெளியே போய்விட்டு வருகிறேன்" என்ருன்.

கிழவி ஆச்சரியத்துடன், "நீ எங்கேயப்பா போகப்போறே, இத் தனை பெரிய ஊரிலே..? எங் கேயானும் போய் நசுங்கிவிடுவாய்"

கிழவிக்குப் பயம் வந்துவிட்டது. "ஐயையோ,.. நீ என்ன உன் சுயபுத்தியுடன் தான் பேசுகிறாயா?.. அங்கே போனால் உன்னை இந்த உலகத்திலேயே காண முடியாதே அப்புறம். ராஜகுமாரி எங்கே, நீ எங்கே.. நீதான் எனக்குச் சகலமும். நீ போய்விட்டால் எனக்கு யாரப்பா அப்புறம்?" என்று கத்தினாள்.

விசித்திரன், "பாட்டி.. இதென்ன இத்தனை பயம் உனக்கு? நான் திரும்பி வந்தப்புறம் பாரு...." என்று கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டான். கிழவி கவலையுடன் உட்கார்ந்துவிட்டாள்.

என்றாள். அவளுக்கு அவன் வெளியே போவது பயமாய் இருந்தது.

விசித்திரன், "ஹூம்..என்னை என்னன்னு நினைச்சுண்டே பாட்டி..நான் இப்போ எங்கே போறேன், தெரியுமா? இப்பொழுது இந்த ஊரை ஆளும் ராஜா இல்லையா? அவர் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு வரப்போறேன்" என்றான் அலட்சியமாக.

விசித்திரன் நேராக அரண்மனை சென்றான். அவன் ஒரே ஒரு விரல் அளவுதான் இருந்தான். அதனால் அவனை ஒருவரும் பார்க்கவில்லை.

அரண்மனையில் அன்று ஒரே கோலாகலம். ராஜகுமாரிக்குத் தகுந்த ராஜகுமாரனை அரசன் தேர்ந்தெடுக்கிறான் என்பதுதான் அதற்குக் காரணம். எல்லா ஊர் ராஜகுமாரர்களும் வந்து சேர்ந்திருந்தனர். எல்லா ராஜகுமாரர்களும், 'நான்தான், நீதான்' என்று போட்டியிட்டுக்கொண்டு முன் வந்தனர். அரசன் ஒவ்வொரு ராஜகுமாரனையும் பார்த்துப் பார்த்து ஒதுக்கினான். கடைசியில் அதி பலசாலியும் அழகனும் புத்திசாலியுமான ஒரு ராஜகுமாரனைத் தேர்ந்தெடுத்தான். அவனை அருகில் அழைத்து வைத்துக்கொண்டு, "சபையோர்களே, இதோ என் அருகில் நிற்கும் இந்த ராஜகுமாரரே நம் குமாரிக்குச் சரியானவர்" என்று அந்த ராஜகுமாரனை ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தினான்.

ஜனங்களும் வெகு சந்தோஷத்துடன் இருந்தனர். இந்தச் சமயத்தில் விசித்திரன் யார் கண்ணிலும் படாமல் நேராக அரசனின் சிம்மாசனத்தின் மேல் பக்கம் வந்து நின்றுகொண்டான். அரசன் அந்த ராஜகுமாரனை அறிமுகப்படுத்திய உடனே அரசனின் கிரீடத்தைத் தட்டிவிட்டான். எல்லாரும் திடுக்கிட்டனர். விசித்திரன் சிம்மாசனத்தின் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டு வேடிக்கை பார்த்தான். எல்லாரும் ஒரே கூச்சல் போட்டார்கள். "அபசகுனம்.. அபசகுனம்.. இந்த ராஜகுமாரன் நமக்கு வேண்டாம்" என்று கத்தினார்கள். கிரீடம் தானாக விழுந்ததாக அவர்கள் நினைத்தார்கள். விசித்திரன் அவர்கள் கண்ணில் எப்படித் தென்பட்டிருப்பான்!

அரசனும் அதை ஆமோதித்தான். தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜகுமாரன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு அவமானத்துடன் வெளியே போய்விட்டான். மற்ற ராஜகுமாரர்களும் தங்களை அரசன் ஒதுக்கிவிட்டார் என்ற அவமானத்தால் அப்போதே போய்விட்டார்கள். அதனால் அரசர், "இனி யாரை நம் குமாரிக்குத் தேர்ந்தெடுப்பது?" என்றான் கவலையுடன். அப்போது தான் விசித்திரன் வெளியே வந்தான். "இதோ நான் இருக்கிறேன், அரசே" என்றான். அரசன் திடுக்கிட்டான். எதிரே யாரும் இல்லை. குரல் மட்டும் வந்தது. "யார் அது?" என்றான் அதிகாரமாக. விசித்திரன் அரசனின் கைமேல் வந்து நின்றான். அரசன் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான். "என்ன, நீயா.. சீ..போ, வெளியே" என்று கோபத்தோடு இன்னொரு கையில் விசித்திரனை நசுக்கப் போனான். அதற்குள் விசித்திரன் அரசனின் தோளுக்குத் தாவி அவன் காதைக் கடித்துவிட்டான். அரசனுக்கு வலி தாங்கமுடியவில்லை. எழுந்து குதித்தான். விசித்திரனைத் தள்ளிவிடப் பார்த்தான். ஆனால் ஒன்றும் முடியவில்லை. விசித்திரன் அரசனின் தலையில் ஏறி உட்கார்ந்துகொண்டான். குள்ளன் போய்விட்டான் என்று எண்ணித் தன் மாளிகைக்குச் சென்றான் அரசன். ஆனால் அங்கே சென்று இளைப்பாறும்பொழுது விசித்திரன் அவன் எதிரில் வந்து நின்று, "அரசே, எனக்கு உங்கள் பெண்ணை மணம் செய்து வையுங்கள். உங்களுக்கு அதனால் ஒரு கெடுதலும் வராது" என்றான் நயமாக.

ஆனால் அரசன் கேட்பானா? "சீ..பதரே.. போ வெளியே.. உன்னைக் கொல்ல எவ்வளவு நேரம் பிடிக்குமென்று நினைத்தாய்? போனால் போகட்டுமென்று பார்க்கிறேன். மரியாதையாகப் போய்விடு" என்று மிரட்டினான். விசித்திரனா விடுபவன்? "ஹூம்..என்னைக் கொல்ல எவனால் முடியும்? எங்கே அதையும்தான் பார்ப்போம்.." என்று தன் சிறு மீசையை முறுக்கினான். அரசனின் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

"என்ன, அவ்வளவு துணிச்சலா உனக்கு!" என்று பக்கத்திலிருந்த அழகிய சலவைக் கல் பொம்மை ஒன்றை எடுத்து விசித்திரன்மேல் வீசினான். ஆனால் அதற்குள் விசித்திரன் வேறு மூலைக்கு ஓடிவிட்டான். பிறகு பின்புறமாக வந்து அரசன் மேல் ஏறி அரசன் மூக்கிலும் காதிலும் புகுந்து அவனை அநேக கஷ்டங்களுக்கு உள்ளாக்கினான். அரசன் உபத்திரவம் தாங்காமல் தன் சேனையை அழைத்து, "எப்படியேனும் இந்தக் குள்ளனைக் கொன்றுவிடுங்கள்" என்று உத்தரவிட்டான். அவ்வளவு சிறு உடம்புடன் இந்த விசித்திரன், சைன்னியத்தார் கையில் சிக்குவானா? தப்பிக் கொண்டு அரசனைத் தொந்தரவு செய்ய வந்துவிட்டான். அரசன் எவ்வளவு முயன்றும் அவனால் விசித்திரனை ஒன்றுமே செய்ய முடியவில்லை. கடைசியில் ராஜகுமாரி தந்தை படும் அவஸ்தையைப் பார்க்கச் சகிக்காமல், "அப்பா, நான் அவரையே மணம் செய்துகொள்ளுகிறேன்" என்றாள்.

அரசன், "என்னம்மா, உனக்கு என்ன வந்துவிட்டது? இவனுக்கா உன்னைக் கொடுப்பது! உன் அழகென்ன! அந்தஸ்தென்ன!" என்று ராஜகுமாரியைக் கேட்டான்.

அவள், "அப்பா..நீங்கள் படும் கஷ்டத்தை என்னால் பார்க்க முடியவில்லை. என்னால்தானே உங்களுக்கு இந்த உபத்திரவம்? விசித்திரன் உங்களை இரவுபகலாகத்

தூங்கவிட மாட்டேன் என்கிறார். என்னால் உங்களுக்குக் கஷ்டம் வர வேண்டாம். நான் இவரையே தான் மணம் செய்துகொள்ளப் போகிறேன். இது நிச்சயம்'' என்றாள் தீர்மானமாக.

அரசன் வேறு வழி இல்லாமல் விசித்திரனிடம், தன் பெண்ணை அவனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தான். அதன்படி மறு வாரமே விவாகம் நடந்தது. மற்ற ஊர் ராஜகுமாரர்கள் பரிகாசம் செய்ய, ஊர் ஜனங்கள், ''இதென்ன அரசனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?'' என்று அதிசயித்தார்கள். அரசனுக்கும் ராணிக்கும் ஒரே துக்கம். ராஜகுமாரிக்கும் துக்கமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதை அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அரசனும் அரசியும் அழுது கொண்டே அவர்களுக்குச் சீர் கொடுத்தனுப்பினார்கள். விசித்திரன், சகல விருதுகளையும் சாமான்களையும் அங்கேயே விட்டு விட்டு ராஜகுமாரியுடன் நேராகக் கிளம்பினான்.

நேராகக் கிழவியின் குடிசையை இருவரும் அடைந்தனர். கிழவி ஆச்சரியத்துடன் ராஜகுமாரியைப் பார்த்தாள்.

''பார்த்தாயா பாட்டீ, சொன்ன படி ராஜகுமாரியைக் கல்யாணம் செய்துகொண்டு வந்துட்டேன்!''

''ஆமாம் அப்பா, நீ சாதாரண மனிதனா? சொன்னபடியே செய்தும் காட்டிவிட்டாயே'' என்று ஆச்சரியப்பட்டாள் கிழவி.

''என் வீடு எங்கே, பாட்டீ?'' என்றான் விசித்திரன். ''இதோ'' என்று உள்ளே காட்டினாள் கிழவி. விசித்திரன் ராஜகுமாரியைப் பார்த்து, ''இதோ பார், இந்த வீட்டை அந்த மேட்டின்மேல் வை'' என்று சற்றுத் தூரத்திலுள்ள ஒரு மேட்டைக் காண்பித்தான். ராஜகுமாரியும் அப்படியே செய்தாள்.

உடனே விசித்திரன் அந்த வீட்டினுள் சென்றான். அப்போது மின்னல்போல் ஒரு வெளிச்சம் தோன்றி மறைந்தது. கிழவிக்கும் ராஜகுமாரிக்கும் கண்கள் கூசின. கண்களை மூடித் திறந்தபோது அந்தச் சிறு வெள்ளி வீடு ஒரு பெரிய அரண்மனையாக மாறிவிட்டது. உள்ளே இருந்து வாட்ட சாட்டமான ஒரு ராஜகுமாரன் வந்தான்.

ராஜகுமாரி ஆச்சரியத்தினால் ஒன்றும் சொல்லத் தெரியாமல் திகைத்து நின்றாள். விசித்திரன், ''நான்தான் உன் கணவன். ஒரு பெரியவரின் சாபத்தால் குள்ளனாகிவிட்டேன். இனி அது தீர்ந்தது. வா, போகலாம்'' என்றான்.

பிறகு கிழவியின் பக்கம் திரும்பி, ''பாட்டீ.. இந்தா உனக்கு வேண்டிய பணம். உனக்கு எப்பொழுது, என்ன வேண்டுமானாலும் என்னிடம் வந்து கேள், தருகிறேன். அன்று நீ பூசணிக்காயைப் பறிக்காமல் நான் சொன்ன சமயத்தில் அதைப் பறித்து அறுத்திருந்தால் நான் இந்தக் குள்ளன் ரூபத்தில் வெளியே கஷ்டப்பட்டே இருக்க மாட்டேன்'' என்று சொல்லிக் கிழவியிடம் பெரிய பண முடிப்பு ஒன்றைக் கொடுத்துவிட்டு ராஜகுமாரியுடன் அரண்மனைக்குள்ளே சென்றான்.

இது தெரிந்ததும் அரசன் தன் ராணியுடன் ஓடிவந்தான். மாப்பிள்ளையும் பெண்ணும் சந்தோஷமாய் இருப்பதைக் கண்டு திருப்தியுடன் திரும்பிச் சென்றனர்.

திருட்டு நாடகம்

மணியன்

"ஏண்டா மணி! நேத்து ராத்திரி சத்தப்படாமே எங்கேயோ போனயே, எங்கேடா?" என்று கேட்டார் சர்மா. எனக்குத் திக்கென்றது. இருந்தபோதிலும் சமாளித்துக்கொண்டு, "சம்சாரம் பார்க்கப் போனேன், மாமா!" என்றேன். அதுக்கு, "ஏண்டா திருடன்மாதிரி திரும்பித் திரும்பிப் பார்த்துண்டு போனே?" என்றார் அவர்.

"அப்பாவைக் கேட்டால் பரீட்சை சமயத்திலே விடமாட்டார்! அதனாலே எல்லாரும் தூங்கின பின்பு தெரியாமல் போனேன், மாமா!"

"அப்பவே தெரியும் எனக்கு! அந்தக் காலத்திலே" என்று ஆரம்பித்தார். நானும் அவர் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டேன்.

சர்மா எங்கள் தெருவில் என் வீட்டுக்கு எதிர்ப் பக்கத்தில் இருந்தார். போஸ்ட்மாஸ்டராக இருந்து ரிடையராகிப் பென்ஷன் வாங்கிக்கொண்டு இருக்கிறார். சொந்த வீட்டிலேயே காலம் கழித்து வருகிறார். சென்னையில் கேட்க வேண்டுமா, சொந்தமாக வீடு இருந்தால்? அவர் வீட்டில் ஏழு குடித்தனக்காரர்கள். சர்மாவும் அவர் மனைவியும்தான் தற்போது அங்கே இருக்கிறார்கள். ஒரு பிள்ளை பம்பாயில் வேலையாயிருக்கிறான். இரண்டு பெண்கள் வேறு எங்கேயோ இருக்கிறார்கள். அடிக்கடி அவர் எனக்குக் கதைகள் சொல்வார். அன்றும் அப்படித்தான்!

அந்தக் காலத்திலே நான் ஹைஸ்கூலிலே, இல்லே இல்லே, காலேஜிலே படிக்கிறபோது இந்தச் சம்பவம் நடந்தது. நான் அப்போ சிதம்பரத்தில் படித்துக்கொண்டிருந்தேன். அங்கே யாரும் சொந்தக்காரர்கள் இல்லையாதலால் காலேஜ் ஹாஸ்டலிலேயே சேர்ந்து படித்து வந்தேன். ஹாஸ்டல் வார்டன் மிகவும் கண்டிப்பான பேர்வழி. ஹாஸ்டல் பிள்ளைகள் யாரையும் அதிக நேரம் வெளியே விடாமல் பாதுகாத்து வந்தார். மாலை நாலு மணிக்கு மேல்தான் பிள்ளைகள் எங்கேயும் போகலாம். அதுவும் 6 மணிக்குள் திரும்பிவந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் ஹாஸ்டல் கேட்டைப் பூட்டிவிடுவார்கள்.

ஹாஸ்டல் பிள்ளைகள் காலேஜில் நல்ல மார்க்கு வாங்கவேண்டும். எவனாவது 50 மார்க்குகளுக்குக் குறைவாக வாங்கினால் வந்தது ஆபத்து. "ஏண்டா, தடிப்பயலே! உனக்கென்னடா குறைச்சல்? ராஜா மாதிரி சாப்பிட்டுவிட்டுப் படிக்காமே என்னடா செய்யறே! இனிமேல் இதுமாதிரி வாங்கினால் உன்னை டிஸ்மிஸ் செய்துவிடுவேன்" என்று கத்த ஆரம்பித்துவிடுவார். அதுபோலவே மற்ற விஷயத்திலும் மிகவும் கண்டிப்பாகவே இருந்து வந்தார். "நாடகம் பார்க்கணும் சார்!" என்று எவனாவது அவரிடம் கேட்டுவிட்டால் வந்தது ஆபத்து. "என்னடா, நாடகம் வேண்டிக் கிடக்கு! யாரோ ரெண்டு பேர் வந்து காலைத் தூக்கி, 'தா - தை' அப்படின்னு ஆடிக் காசைப் புடுங்கறா! அதை வேறு பார்க்கணுமாடா! நாடகமாம், கூத்தாம்" என்று இவரே டான்ஸ் செய்ய ஆரம்பித்துவிடுவார்.

மணி! உன் சினிமாப் பைத்தியத்தைப் போலவே நானும் அப்போது நாடகப் பைத்தியம் பிடித்துக்கொண்டு அலைந்தேன். என் அறையில் ஒரு பையன் இருந்தான். அவன் என்னைவிட ஒரு வகுப்பு அதிகம் படித்து வந்தான். எப்போது பார்த்தாலும் புஸ்தகத்தையே கட்டிக்கொண்டு அழுவான். நான் அறையில் படிக்காமல் என் நண்பன் கோபாலன் அறையிலேயே படிப்பேன். அங்கேயே எப்போதும் படுத்துக்கொண்டு விடுவேன். அப்போது ஒரு பிரசித்தி பெற்ற நாடகக் கம்பெனி வந்திருந்தது. அவர்களுடைய, 'குலேபகாவலி' நாடகம் ரொம்ப நன்றாயிருக்கிறது என்று பார்த்தவர்களெல்லாம் சொன்னார்கள். அதனால் என் நண்பன் கோபாலும் நானும் அதைப் பார்க்க எண்ணினோம்.

அன்றுதான் கடைசி நாள். இரவு மணி 10 அடித்தது. பத்து அடித்த

பிச்சைக்காரன்: ஐயா, சாமி! பசி கண்ணை இருட்டுதுங்க! எதுனாச்சும்....!

கண் வைத்தியர்: இந்தாப்பா, கம்பவுண்டர்! கண்ணுக்கு ஊத்தற மருந்திலே இரண்டு சொட்டு ஊத்தி அனுப்பு..

பிச்சைக்காரன்:........?

—S. ஞானசம்பந்தம்.

பின்புதான் படுக்கவேண்டும் என் பது வார்டன் கட்டளை. அதன்படி எல்லாரும் படுக்கப் போய்விட்டனர். நானும் கோபாலும் இரண்டாவது ஆட்டத்துக்குப் போக முதலிலேயே பிளான் போட்டு வைத்துவிட்டதால் ஹாஸ்டலை விட்டுக் கிளம்பினோம்.

மெதுவாகப் பதுங்கிப் பதுங்கி ஹாஸ்டல் சுவர் அருகில் வந்து நின்றோம். சுவரின் ஓரம் ஒரு மரம் சாய்ந்து வளர்ந்திருந்தது. அதன் மீது ஏறி சுவரிலிருந்து வெளியே குதித்தோம். முன்னேற்பாடாக எங்களை யாரும் தெரிந்துகொள்ளாமலிருக்கக் கையிலிருந்த டவலின் உதவியால் முண்டாசு கட்டிக் கொண்டோம். இருவரும் கொட்டகையை அடைந்து உள்ளே சென்றோம் டிக்கட்டுடன்.

நாடகம் முடிந்தது. வெகு அற்புதமாக இருந்தது நாடகம். இருவரும் கூட்டத்தை விட்டுப் பிரிந்து ஹாஸ்டலை நோக்கி நடந்தோம். எங்களுக்கு முன்பு பல முண்டாசு உருவங்கள் போய்க் கொண்டிருந்தன. அவர்கள் யாரோ என்று எண்ணிக்கொண்டு நாங்கள் அவர்களைக் கவனியாமல் விடு விடு என்று ஹாஸ்டலை நோக்கிச் சென்றோம்.

நல்ல வேளை! அன்று கடவுள் புண்ணியத்தால் நாங்கள் ஹாஸ்டல் முன் வழியாகச் செல்லவில்லை. பின் வழியாகவே சென்றோம். நான் என் அறையை அடைந்தேன். அறை பூட்டிக் கிடந்தது. மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 'புத்தகப் புழு' (என் அறையில் இருந்த மற்றொருவனுக்கு நாங்கள் அன்புடன் வைத்த பெயர்) கூட நாடகத்துக்குப் போயிருக்கிறான்.

உடனே நான் என் கையிலிருந்த சாவியைக்கொண்டு பூட்டைத் திறந்தேன். ஓர் அறைக்கு இரண்டு பேர் ஆகையால் இருவரிடமும் சாவி இருக்கும். அப்போது ஹாஸ்டல் தோட்டக்காரப் பையன் அந்த வழியே வந்தான். நான் அவனை அழைத்து, "எங்கேடா இந்நேரத்தில் போகிறாய்?" எனக் கேட்டேன். அதற்கு அவன், "வார்டன் எல்லா ரூமையும் சோதனை செய்துகொண்டு வந்தார். அதில் 22 பேரைக் காணவில்லை. நாடகத்துக்கு திருட்டுத்தனமாகப் போயிருப்பார்கள் என்று எண்ணி மற்ற இரண்டு பியூன்களுடன் கேட் ஓரத்தில் நின்றுகொண்டிருக்கிறார்" என்று கூறினான்.

அதைக் கேட்டதும் எங்களுக்குத் 'திக்'கென்றது. கோபால் அவனிடம் நாலணாவைக் கொடுத்து, "நாங்கள் இருவரும் உள்ளே போய்விடுகிறோம். நீ ரூமைப் பூட்டிவிட்டுப் போய்விடு" என்றான். அம்மாதிரியே உள்ளே நாங்கள் போக, அவன் ரூமைப் பூட்டிவிட்டுச் சென்றான்.

ஹாஸ்டல் கொஞ்ச நேரம் நிச்சப்தமாக இருந்தது. நாடகம் பார்த்து விட்டு வந்த யாவரும் ஒருவர் பின் ஒருவராக உள்ளே குதிக்கவே, கீழே தயாராக இருந்த பியூன்களும் வார்டனும் அவர்களைக் கையோடு பிடித்து ஹாஸ்டல் மெயின் ஹாலில் கொண்டுவந்தார்கள். எடுத்த ஜாபிதாவின்படி ஒவ்வொருவராகப் பேரை வாசித்தார் வார்டன். அவர் வாசித்தவர்களில் 8-ஆம் நம்பர் ரூம் சர்மா, 2-ஆம் நம்பர் ரூம் கோபால் இருவரையும் அங்கே காணோம். அவர் மற்றவர்களைப் பார்த்து, "கோபாலையும் சர்மாவையும் நீங்கள் நாடகக் கொட்டகையில் பார்த்தீர்களா?" என்று கேட்டார். அவர்கள் இல்லை என்று கூறிவிட்டனர்.

அவரே நேராக எங்கள் அறையின் அருகில் வந்தார். ரூம் பூட்டியிருந்தது. திறந்து வைத்த ஜன்னல் வழியாக டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார். நாங்கள் அப்போதுதான் புரண்டு படுத்தோம். உடனே அவர் 'புத்தகப்புழு'வை அழைத்து, "தடிப் பயலே! நாடகத்துக்குப் போகிற அவசரத்திலே உள்ளே இருக்கிறவர்கள் கூட உனக்குத் தெரியவில்லையா?" என்று திட்டினார். எங்களுக்கோ சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. புத்தகப் புழுவுக்கு, பாவம், அவமானமாக இருந்தது. நல்ல வேளை! எல்லோரையும் மன்னித்து அனுப்பி விட்டார் வார்டன்.

"எப்படிடா மணி, நாங்கள் நாடகம் பார்த்தது?" என்றார். "சபாஷ்; மாமா?" என்று ஒரு சபாஷ் போட்டுவிட்டு வந்து விட்டேன்.

பலசாலி!

சூரியனுக்கும் வாயுபகவானுக்கும் ஒரு நாள் பெருத்த விவாதம் ஏற்பட்டது. தங்களுக்குள் யார் அதிகத் திறமையுள்ளவர் என்பதைப் பற்றித்தான். விவாதம் முற்றிக் கடைசியில் வழியில் செல்லும் ஒரு பிரயாணியை தன் மேற்சட்டையைக் கழற்றும்படி செய்வோரே போட்டியில் வெற்றி பெற்றவராவார் என்ற முடிவுக்கு இருவரும் வந்தனர். முதலில் வாயுபகவான் தன் பராக்கிரமத்தைக் காட்ட முன்வந்தார். காற்றைச் சுழற்றிச் சுழற்றி வீசி மூச்சைத் திணற அடித்தார். பிரயாணியின் தலை மயிரும் மேற்சட்டையும் காற்றில் பறந்தது. மேலும் மேலும் அவன் சட்டையை இழுத்து உடம்பை நன்றாக மூடிக் கொண்டான். காற்றில் சட்டை பறந்து கிழியாமல் இருக்கத் தன் கையால் உடம்புடன் பிடித்துக் கொண்டான். வாயு பகவானின் ஆட்டம் ஒய்ந்தது.

பிறகு சூரியன் தன் கிரணங்களை அந்தப் பிரயாணியின் தலையில் விழச் செய்தான். மிகவும் புழுக்கமாக இருந்தபடியால் பிரயாணி சட்டைப் பொத்தான்களைக் கழற்றினான். பிறகு சூரியனின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் அவன் தன் சட்டையைக் கழற்றிவிட்டு மரத்து நிழலில் உட்கார்ந்தான். வாயு பகவானின் ரௌத்திராகாரத்தை விட, சூரியனின் கிரணங்கள் மட்டும் அவன் சட்டையைக் கழற்றும்படிச் செய்தன.

ஆர்ப்பாட்டத்தைவிட அமைதியே பலம் வாய்ந்தது என்பதை வாயுபகவான் தெரிந்து கொண்டார்.

—ஈசாப் கதை

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(S) 503. சுப்பிரமணியன், K. N., ஸ்ரீவைகுண்டம். 504. சிவராமன், S., கிருஷ்ணகிரி. 505. சிவநாதன், P., உல்பாரு. 506. சீனிவாசன், பிரசன், மேட்டூர் அணை. 507. சுப்பிரமணியன், S.R., சிங்காநல்லூர். 508. சுப்பிரமணியன், K., ராஜபாளையம். 509. சுந்தரம், R., ராசிபுரம். 510. சன்கிருஷ்ணன், P. L., உதகமண்டலம். 511. சுபாஷ்சந்திர போஸ், P., சென்னை-11. 512. சஜீத் M.J.A., கொழும்பு. 513. சுந்தரம், M.K., சென்னை-5. 514. சந்தானம், N. S., சேலம். 515. செல்வராஜ், A., கொழும்பு. 516. சிவராமன், V., திருச்சிராப்பள்ளி. 517. சௌந்தரபாண்டியன், K., புதுச்சேரி. 518. ஷேக் மசூப், கோயம்புத்தூர். 519. சிவகாமி, கந்தசாமி, P., இடப்பாடி. 520. சாமிக்கண்ணு, A., ஆடுதுறை. 521. சௌந்தரராஜன், J., மதுரை. 522. சுந்தரேசன், S., புதுச்சேரி. 523. சுந்தர மகாலிங்கம், K., சட்டிராப்பட்டி. 524. சுந்தரம், சுப்பிரமணியன், K. S., கல்லிடைக்குறிச்சி. 525. சிவப்பிரகாசம், T. M., குடியாத்தம். 526. சுந்தரம் T., வண்டலூர். 527. சிவராமகிருஷ்ணன், N.S., பரன்பூர். 528. சிவராமன், P., இடப்பாடி. 529. சையத் கியாஸுதீன், திருக்களாச்சேரி. 530. சிவராஜன், V. N., ஊத்துக்குழி. 532. சிவசுப்பிரமணியன், V. S., கொண்டபுரம். 533. சிவராஜன், R., திருவண்ணமலை. 543. சிவராமலிங்கம், R., திருநெல்வேலி. 535. சாந்தாபாய், காமாக்ஷி, ஸ்ரீவைகுண்டம். 536. சாந்தா, வசந்தா, S., வேலூர். 537. சுப்பிரமணியம், M., சென்னை-5. 539. சீனிவாசன், ராமானுஜம், வரதராஜன், பத்மா, ஜயமணி, விஜயராகவன், ராஜி, V. S., சென்னை-17. 540. சுப்பிரமணியன், N., சென்னை-17. 541. சையத் மஸ்தான், M., புதுச்சேரி. 542. சாரங்கராஜன், K., சென்னை-4. 543. சுந்தரம்மாள், S., கொழும்பு. 544. சுந்தர், K.S., சென்னை-14. 545. சேகரன், K.N., சென்னை-17.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

மே '52 கூபன் நெ:

546. சுப்பிரமணியன், S., அணைக்கரை. 547. சேஷன், R. S., மதுரை. 548. சாயிபாபா, T.S., சென்னை-5. 549. சுந்தரராஜன் S., சாத்தூர். 550. சுப்பையன், R., மதுரை. 551. சுந்தரராஜன், N. R., நங்கவரம். 552. சீனிவாசன், வத்ஸலா, S, சென்னை-24. 553. சுப்பிரமணியன், K., திருவிடைமருதூர். 554. ஷேக் தாவூத், M., வழுத்தூர். 555. சீதா, M.R., திருவள்ளூர். 556. செல்வரங்கன், P., சென்னை-4. 557. சகாதேவதுரை, A., சுளிபுரம். 558. சங்கரகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி, V., சோழவந்தான். 559. செல்வராஜா, S., நெல்லூர். 560. சுப்பிரமணியன், சாமிநாதன், V., ஆரகளூர். 561. சேதுராமலிங்கம், A., கீழக்கரை.

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்
இங்கிலீஷ் 1 - ஆம் தேதி
வெளிவரும்.

புதிதாகச் சேருபவர்கள் 1952-
ஆம் வருஷக் கூபன்களைத்
தான் அனுப்பவேண்டும்.
1951-ஆம வருஷக்
கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

562. ஷேக் அலாவுதீன், ஆதிகுடி. 563. சுப்பிரமணியன், சீனிவாசன், மோகனூர். 564. சம்பத், சுப்பிரமணியன், K.R.G., ஆரணி. 565. சண்முகநாதன், S.K., மணிப்பாய். 566. சுப்புலக்ஷ்மி, V. S., ராஜபாளையம். 567. செல்வராஜ், R., சென்னை-18. 568. சுப்பராஜ், R., விருதுநகர். 569. சுப்பிரமணியன், B., திருவனந்தபுரம். 570. சுப்பிரமணியன், V. R., உடுமலைப்பேட்டை. 571. சத்தியவேல், M. V., மணிநகரம். 572. சீனிவாசன், S. S., சட்டநாதபுரம். 573. சேதுபதி, B., திருப்பராய்த்துறை. 574. சூசை அலங்காரம், பெர்னண்டோ, கொழும்பு. 575. சுந்தரம், N., குளிப்பிறை. 576. சாரதா, பத்மாவதி, G., பெங்களூர். 577. சுவாமிநாதன், S., (விலாசம் எழுதவில்லை) 579. சண்முகநாதன், I., புதூர். 580. சாந்திலால், சோகன்லால், K., செங்கம். 581. சுப்பையா, S., ரத்தினப்புரா. 582. சாரதா, மீனாம்பாள், ஜலகண்டபுரம். 583. சாவித்திரி தேவி, சந்திரன், பாலகிருஷ்ணன், ராமசந்திரன், K. C., யாழ்ப்பாணம். 584. சுப்பிரமணியன், மீனாக்ஷி, V., சென்னை-17. 585. சோபனா, விசு, புதுடில்லி. 586. சீனிவாசன், K., புனா. 587. சங்கரன், M.K., திருச்சிராப்பள்ளி. 589. சுப்பிரமணியன், சுந்தரம், P. S., வேலூர். 590. சுப்பிரமணியன், A. V., சென்னை-5. 591. சுந்தரேசன், A. V., சென்னை-5. 592. சுந்தரராமன், N., வீரராகவபுரம். 593. சங்கரநாராயணன், R., கல்லிடைக்குறிச்சி. 594. சிவதாஸ், T. N., திருச்சூர்.

(மீதி அடுத்த இதழில்)

வெளவால்

பி. நாராயணன்

வெளவாலை நீங்கள் எல்லாரும் பார்த்திருக்கிறீர்கள், அல்லவா? சரி; அதைப் பற்றி ஒரு கதைகூடக் கேள்விப் பட்டிருப்பீர்களே! அதுதான்,.. பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் நடந்த சண்டையில் வெளவால் இரு கட்சியிலும் சேர்ந்ததாம்!.. ஆமாம்! அந்தக் கதையேதான்! அது வெறும் சட்டுக் கதை! எதோ சோம்பேறிகள் கயிறு திரித்தார்கள்! அதில் முளைத்ததுதான் இந்தக் கதை!

வெளவால் பாழடைந்த மண்டபங்களிலும் இருள் அடர்ந்த மரங்களிலும் தங்குகிறது. பகல் நேரங்களில் இது வெளியே வருவதில்லை. இதற்கு முக்கிய காரணம் வெளவாலுக்குச் சூரிய வெளிச்சம் பிடிக்காது. சூரிய வெளிச்சத்தில் அதன் கண் பார்வை மட்டு. வெளவால் ஒரு பறவையுமல்ல; மிருகமுமல்ல. ஆனால் பறவையும்தான்; மிருகமும்தான். அதற்கு பல் இருக்கிறது, அதனால் மிருகம். பறக்கிறது; அதனால் பறவை. ஆதலால் வெளவால் ஓர் இரண்டுங் கெட்டான். (இனி அதை 'மிருகப் பறவை' என்று கூப்பிடலாமென்று நினைக்கிறாயா? பேஷ்..பேஷ்..!) இது மிருகவர்க்கத்தைச் சேர்ந்தது என்றுதான் முக்காலும் தோன்றுகிறது. ஏனென்றால், மிருகங்கள் குட்டி போடுகின்றன. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.வெளவால் குட்டிதான் போடுகிறது. ஆனால் பறவை போல் பறக்கிறது! அதனால்தான் வெளவால் ஓர் இரண்டுங் கெட்டான் என்று சொன்னேன்!

வெளவால்குட்டி போட்டுத் தன் மார்பில் குட்டியை வளர்க்கிறது. குட்டிவெளவால் தாயின் கழுத்தை நகத்தால் இறுகப் பிடித்துக் கொள்கிறது. குட்டி வெளவால் பறப்பதற்கும் மரக்கிளையில் தொங்கவும் தாய் வெளவால் கற்றுக் கொடுக்கிறது. அதற்குப் பிறகு குட்டி வெளவால் தனியாக வாழச் செல்லும்.

இதன் இறகிலுள்ள நரம்பு பறப்பதற்கும் மரக்கிளையில் தொங்குவதற்கும் சௌகரியமான விதத்தில் அமைந்திருக்கிறது.

வெளவால் சாயந்திர வேளைகளில் அதாவது ஆறு, ஆறரை மணி சமயத்தில் பறக்க ஆரம்பிக்கும். இது பறக்கும் போது வாயைத் திறந்துகொண்டே பறக்கும். போகிற போக்கில் எதாவது பூச்சி அதன் வாயில் மாட்டிக் கொள்ளும். உடனே வெளவால் அதை 'ஸ்வாஹா' செய்துவிடும். எதாவது வண்டு அகப்பட்டால் வெளவால் அதன் மேலேயுள்ள கெட்டியான மூடியை நீக்கிவிடும். அதற்கான சாமர்த்தியம் வெளவாலுக்கு உண்டு!

வெளவால் மரக்கிளைகளில் தொங்கும்போது தான் கீழே விழாதபடி மரக்கிளையில் நன்றாகப் பிடித்துக்கொண் டிருக்கிறது.

அதக்குக் கால் நரம்புகள் மிகவும் உதவுகின்றன. அது மரக்கிளையில் தொங்கும் போதும் பறக்கும் போதும் நெஞ்சிலுள்ள வெளவால் குட்டி கீழே விழாதபடி அதன் பை அமைந்திருக்கிறது.

அது சரி, உங்களை ஒரு மரங்கள் நிறைந்த சோலைக்குக் கூட்டிச் சென்று கண்ணைக் கட்டிவிட்டு, நடக்கச் சொன்னல்..! மரத்தில் ஒரு..கும்! ஒரு..ணங்! "அப்பாடா! மண்டை போச்சு!" என்று சொல்லிவிட்டு அப்படியே கல்லுப் பிள்ளையார் மாதிரி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பீர்கள்..! இல்லையா? ஆனல் காதைக் கட்டி விட்டால் 'ஜாம் ஜாம்' என்று ராஜாபோல் ராஜ நடை போட்டு நடப்பீர்கள்! இல்லையா? ஆனல் வெளவாலின் கண்களைக் கட்டி, நீ முட்டிக் கொண்டாயே, அதே சோலையில் பறக்க விடு! 'ஜாம் ஜாம்' என்று ஒரு மரத்திலும் முட்டிக்கொள்ளாமல் பறக்கும். ஆனல் அதன் காதைக் கட்டிவிடு! அந்த மரத்தில் ஓர் இடி; இந்த மரத்தில் ஓர் இடி! அதன் தலை சட்டினியாகிவிடும்!

'அடேடே! ஆச்சரியமாயிருக்கே' என்கிருயா? நிஜம் தான்! ஆச்சரியம்தான்!

அதன் கண் பார்வை ரொம்ப மட்டு! காதுதான் முக்கியம்! வெளவால் பறக்கும் போது ஒரு சத்தம் செய்துகொண்டே பறக்கிறது. அந்தச் சத்தத்தால் உண்டாகும் அலைகள், எதிரில் உள்ள மரத்தில் போய்ப் படும்! அதில் பட்டு அலைகள் எதிர்த்திசையில்திரும்பும். இந்த அலை, அதாவது திரும்பிவரும் அலை வெளவாலின் காதில் வந்து படுகிறது! காதில் உள்ள சிறிய நரம்புகள் அந்த அலைகளில் உள்ள ஒலியை, ஒலிபெருக்கியைப் போல் வெளவாலுக்குத் தெரிவிக்கிறது! அதனல் வெளவாலுக்கு, ஏதாவது சத்தம்கேட்டால் அந்த இடத்தில் ஏதோ இருக்கிறது என்று வேறு திசையில் பறக்கும். இதெல்லாம் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடக்கும். இப்படிக் காதால்தான் வெளவால் திசை அறிகிறது. கண் இருந்தும் சரியாகக்கூடப் பார்க்க முடியாது.

ஒரு விஞ்ஞானி எப்படி இதைக் கண்டுபிடித்து நிரூபித்தார் தெரியுமா?

ஒரு நாள், ஒரு வெளவாலைப் பிடித்து, அதன் கண்களை மறைத்துவிட்டு, ஒரு சஜ அகலத்தில் கெட்டியான கம்பிகள் அடுக்கடுக்காகத் தரையிலிருந்து அடுக்கியிருந்த ஓர் அறையில் கொண்டு பறக்கவிட்டார். அது ஒரு கம்பியில்கூட மோதிக்கொள்ளாமல் பறந்தது. பிறகு காதைக் கட்டி விட்டுப் பறக்கவிட்டார். அப்போது கம்பிகளில் மோதிக்கொண்டது.

இப்படியே அதன் காதின் உபயோகத்தைக் கண்டுபிடித்தார் அவர்.

"அம்மாடியோவ்..! வெளவால் ஓர் அதிசயப் பிறவிதான்" என்கிறீர்களா? சந்தேகமென்ன?

வெளவாலிலேயேபல ரகமுண்டு. சில இரவு வேளைகளில் பழம் தின்னும். சில மிருகங்களின் ரத்தம் குடிக்கும். லாடம் போன்ற முகமுள்ள வெளவால்கூட இருக்கிறதாம்!

வாஸ்தவமாகவே வெளவால் ஓர் அதிசயப்பிறவிதான்!


டெலஸ்கோப் ★ புரொபஸர் விஞ்ஞானம்
1
கண்ணுக்குத் தெரியாமல் இருந்ததெல்லாம் இதில் நன்றாய்த் தெரிகின்றனவே!
இதைப்பற்றி இன்று இரவு புரொபஸரைக் கேட்போம்.
டெலஸ்கோப்.
2
இதுதான் டெலஸ்கோப். அதோ வானத்தில் புள்ளிபோல் தெரியும் கிரகத்தை இதன் வழியாகப் பாருங்கள்!
3
அடேயப்பா! அந்தப் புள்ளி எவ்வளவு பெரிதாகத் தெரிகிறது! அந்தக்கிரகத்தைச் சுற்றி வளையமாகத் தெரிகிறதே, அது என்ன ஸார்!
அதுதான் சனி என்ற கிரகம். அந்த வளையம் சனியைச் சுற்றியுள்ளது.
சனி என்ற கிரகம்.

4
கிட்ட உள்ள சிறிய பொருள்களை மைக்ரோஸ்கோப் பெரிதாக்கிக் காட்டுகிறது. அதில் கிட்டத்தில் உள்ள பொருள்களைப் பெரிதாக்கிக் காட்டுவதற்கு ஏற்றபடி லென்ஸுகள் வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே டெலஸ்கோப்பிலும் லென்ஸுகள் இருக்கின்றன. ஆனால் தூரத்தில் உள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு ஏற்றபடி இதில் அவைகளை வைத்திருக்கிறார்கள்.
அந்த லென்ஸுகளை எப்படிப் பொருத்தி யிருக்கிறார்கள், ஸார்?
5
6
ஒரு குழி (Concave) லென்ஸும் ஒரு குவி (Convex) லென்ஸும் உள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாகப் பார்த்தால், தூரத்தில் உள்ளவை பெரிதாகவும் நேராகவும் தோன்றும்.
இரண்டு குவி (Double Convex) லென்ஸ் உள்ள டெலஸ்கோப்பின் வழியாகப் பார்த்தால் தூரத்தில் உள்ளவை பெரிதாகவும் தலைகீழாகவும் தோன்றும். வான சாஸ்திரிகள் உபயோகிக்கும் கண்ணாடி இது. மூன்று குவி லென்ஸுகளைப் பொருத்தினால் இது நேராகவே தெரியும்.
1
F
2
1
2



7

இதைக் கண்டுபிடித்ததே ஒரு வேடிக்கையான சம்பவம். சுமார் 350 வருஷங்களுக்கு முன் ஹாலந்தில் மூக்குக் கண்ணாடி வியாபாரியின் குழந்தைகள் இரண்டு பேர் தந்தையின் கண்ணாடிகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அந்தக் கண்ணாடிகளை அடுக்கி அதன் வழியாகப் பார்த்த போது தூரத்திலுள்ள மாதாகோயில் கோபுரம் அருகில் வந்து பெரிதாகத் தெரிந்தது. அவர்கள் கண்ணாடியை விட்டுப் பார்த்த போது மாதாகோயில் தூரத்தில் பழைய இடத்திலேயே இருந்தது. ஆனால் மறுபடியும் கண்ணாடியில் பார்த்த போது இந்த விசித்திரம் தெரிந்தது. ஆகையால் டெலஸ்கோப்பின் தத்துவத்தைக் கண்டு பிடித்தவர்கள் உங்களைப் போன்ற இந்தக் குழந்தைகள் என்றுதான் சொல்லவேண்டும். இந்த அற்புதச் செய்தியை இதாலி நாட்டு விஞ்ஞானியாகிய கலீலியோ கேட்டார். அவர் இரண்டு வகைக் கண்ணாடி லென்ஸ்களைப் பொருத்தி ஒரு டெலஸ்கோப்பைச் செய்தார்.

அதன் வழியாக வான வெளியை உற்று நோக்கினார். அவர் முதன் முதலில் பார்த்தது வியாழனின் சந்திரன்களைத்தான். அடுத்த படியாக அவர் ஒளி வடிவமாகிய சூரியனில் களங்கம் இருப்பது கண்ணுக்குத் தெரிகிறது என்பதைக் கண்டார் இதிலிருந்து மிகப் பெரிய வான சாஸ்திர உண்மைகள் தெரிய வந்தன. அவற்றில் ஒன்று பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பது. இது அந்தக் காலத்து மத குருக்கள் கொண்டிருந்த கொள்கைக்கு மாறாக இருந்தபடியால் கலீலியோவை அவர்கள் துன்புறுத்தினார்கள் அந்த ஹிம்சை காரணமாக கலீலியோ தாம் வெளியிட்டதெல்லாம் பொய் என்று பைபிள் ஆணையாகச் சத்தியம்கூடச் செய்ய வேண்டி வந்தது. அந்தக் காலத்தில் சூரியனே பூமியைச் சுற்றி வருகிறது என்று அந்த மத குருக்கள் நம்பி வந்தார்கள். அதற்குப் பின்பு பலவகையான டெலஸ்கோப்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றுள் பிரதிபலிக்கும் டெலஸ்கோப்பு ஒன்று. பெரிய டெலஸ்கோப்புகளை வைப்பதற்காக நட்சத்திர சாலைகளை அமைத்தார்கள். அமெரிக்காவில் பலோமார் என்னும் இடத்தில் மிகப்பெரிய டெலஸ்கோப்பு இருக்கிறது. அதிலுள்ள கண்ணாடியின் விட்டம் 200 அங்குலம். அதன் விலை 60 லட்சம் டாலர்களுக்குமேல். இதுதான் உலகிலேயே மிகப் பெரியது.



கலீலியோ

கலீலியோ பைபிள் ஆணையாகச்சத்தியம் செய்வது



சூரியனில் உள்ள புள்ளிகள்



வியாழனின் சந்திரன்கள்

நீச்சல் பழக்கம்

அபாயம்; ஜாக்கிரதை!

1. வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு நீந்தாதே.

2. பரந்த நீர்நிலைகளில் துணையின்றி வெகுதூரம் நீச்சலடிக்காதே.

3. பந்தோபஸ்து இல்லாத நீர்நிலைகளில் காற்றடைத்த ரப்பர் டியூப் முதலிய போலி ஆதாரங்களை வைத்துக்கொண்டு நீந்தாதே.

4. வெடவெடவென்று நடுக்கும் குளிரில் நீந்தாதே.

5. ஆறு, ஓடை முதலியவற்றில் எதிர்நீச்சுப் போடாதே.

6. தடுக்கும்படி ஆடைகளை உடுத்துக்கொண்டு நீந்தாதே.

7. புதிய இடங்களில் போய் முன்பின் தெரியாமல் நீந்தாதே.

மிதத்தல் (தொடர்ச்சி)

நீச்சல் ஒரு தேகப் பயிற்சி. ஆபத்துக் காலத்தில் உதவக்கூடியது. ஆகவே பெரியவர்கள் உதவியுடன் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

★

முன்புற நீச்சல் (தண்ணீருக்குள்)

1. நீ நிற்கும் திசையிலிருந்து நேர் எதிர்த் திசையில் நீந்த வேண்டும். எதிர்ப் புறத்தில் போய் இடிப்பதுபோல் போகவேண்டும். இதற்கு முதலில் மிகவும் குறுகலான நீர் நிலைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதே நல்லது. படத்தில் கைகளையும் கால்களையும் உடம்பையும் கவனியுங்கள். தண்ணீரில் குதித்ததுமே உடம்பு மிதக்கத் தொடங்குகிறது.



★

2. தலையும் தண்ணீருக்குள் ஆழ்ந்துவிடுகிறது, கால்கள் வளைந்து கொள்கின்றன. வலது கை, தண்ணீரைத் தள்ளுகிறது. இடது கை, தண்ணீரைத் தள்ளத் தயாராக முன் நிற்கிறது. இடது கைப் புறமாகத் திரும்ப இதுதான் சரியான நிலை.

★



3. வலது கைப் புறமாக திரும்புகிற நிலை. உடம்பு வளைந்திருப்பதையும் கைகள் வைத்திருப்பதையும் கவனியுங்கள்.

4. நேராக நீந்துவது இது. கைகள் நேராக முன்புறம் நீண்டு இருக்கின்றன. கால்கள் சேர்ந்து ஒரே அளவில் உதவிகரமாக மடங்கியிருக்கின்றன.

★

5. கை மாறு போடுவதற்கு முந்திய நிலை. இடது கையும் வலது காலும் நிலை மாறி உடம்பை உந்தித் தள்ளுகின்றன.



★

6. இது கை மாறு நீச்சல். வலது கை முன்னால் இருக்கும்போது முகம் வலது கைப் புறமாக இருக்கவேண்டும். இடது கை தண்ணீரைத் தள்ளியபடி இடது கால்புறம் வந்திருக்கிறது. இதே போலத்தான் இடது கை முன்னால் இருக்கும்போது முகம் அதன் பக்கமே சாய்ந்திருக்கும்.

★

7. தண்ணீரில் குதிப்பதற்கும் பாய்வதற்கும் வித்தியாசமுண்டு. இது பாய்கிற நிலை.



கேட்டீர்களா!

புதிய ராஷ்டிரபதி

இந்தியக் குடியரசின் ராஷ்டிரபதியாக டாக்டர் பாபு ராஜேந்திர பிரசாத் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மே மாதம் 13-ஆம் தேதி அவர் பார்லிமெண்ட் மண்டபத்தில் பதவி ஏற்ருர். உப ராஷ்டிரபதி டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனும் அன்றே பதவி ஏற்ருர். ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி இவர்களின் பதவிக் காலம் ஐந்து வருஷங்கள்.

சென்னையில் மழையும் புயலும்

தண்ணீர்ப் பஞ்சத்தால் சென்னை நகர வாசிகளும் ராஜ்ய மக்களும் சென்ற சில மாதங்களாக அவதியுற்ருர்கள். ஆனல் வங்காளக் குடாக் கடலில் வடகிழக்கே புயல் உருவாகி, கீழ் கடற்கரைப் பிரதேசங்களில் மழையுடன் கலந்து வீசியது. சென்னையில் மட்டும் 18.5 அங்குல மழை பெய்திருக்கிறது. சென்னை நகரத்துக்கு ஜல-சப்ளை செய்யும் புழலேரியின் நீர்மட்டம் திருப்திகரமாக உயர்ந்துவிட்டது.

இந்திய கிரிக்கெட் கோஷ்டி

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கு ஆக்ஸ்போர்டில் நடந்த டெஸ்ட் மாட்சில் பிரமாத புகழ் கிடைத்துள்ளது. குலாம் அகமது எட்டு விக்கெட்டுகளை ஒரே இன்னிங்ஸில் வீழ்த்தினர். 555 பந்துகளை ஒரே இன்னிங்ஸில் வீசி ஒரு புதிய ரிக்கார்ட் ஏற்படுத்தி விட்டார். உம்ரிகர் முதல் இன்னிங்ஸில் 229 ரன்கள் எடுத்துவிட்டார். அவரும் ஹஸாரேயும் சேர்ந்து 366 ரன்கள் எடுத்து இங்கிலாந்து விஜயத்திலேயே ஒரு புதிய ரிக்கார்டு ஏற்படுத்தி விட்டார்கள். இதற்கு முன்பு 1946-இல் ஹஸாரேயும் மன்காடும் சேர்ந்து 322 ரன்கள் எடுத்திருக்கிருர்கள்.

யந்திர இதயம்

சுவாசப் பையின் வேலையையும் இருதயத்தின் வேலையையும் செய்யக் கூடிய யந்திரம் ஒன்றை அமெரிக்க வைத்தியக் கல்லூரி டாக்டர் ஹெல்ம்ஸ் வொர்த் என்பவர் கண்டுபிடித்துள்ளார். இதன் விலை 60 டாலர்கள்தானும். இந்த யந்திரம் ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கிறதாம். ரத்தத்தையும் சுத்தம் செய்கிறதாம்.

டைப் ரைட்டிங் ரிக்கார்ட்

உலக டைப் ரைட்டிங் போட்டியில் நாலாவது ஸ்தானமும் அகில இந்தியாவில் முதல் ஸ்தானமும் பெற்ற இந்தியர் எஸ். எஸ். நில்காஹி, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர் நிமிஷத்துக்கு 112 வார்த்தைகள் அடித்துக் காட்டி இந்திய சாம்பியன் பட்டம் பெற்ருர்.

மேரியா மாண்டிஸோரி அம்மையார்

குழந்தைகள் கல்வி, வளர்ப்பு இவற்றில் புதிய முறை ஒன்றை வகுத்து அதில் வெற்றியும் கண்டவர் மேரியா மாண்டிஸோரி. இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். சென்னை அடையாற்றில் இவர் சில காலம் வாழ்ந்து வந்தார். இவர் மே மாதம் காலமானது கல்வியுலகுக்கே ஒரு பெரிய நஷ்டம்.

மாதம் இருமுறை

கண்ணன் அண்ணு,

வணக்கம். திருப்பாற்கடலைக் கடைந்தபோது வெளிவந்த அமுதத்துக்காகப் போட்டி போட்ட தேவாசுரர்களைப்போல் நாங்கள் மாதம் இரண்டு மூன்று தேதியானதும் பூலோகத்தில் கண்ணனுக்காகப் போட்டிபோட வேண்டியிருக்கிறது. சில சமயம் கிடைக்கிறதும் இல்லை. மறு மாத இதழ் வருவதற்குள் தொடர்கதை எல்லாம் மறந்துபோய் விடுகிறது. ஆகையால் கண்ணன் மாதம் இருமுறைப் பத்திரிகையாக மூன்றணு விலையில் வெளியிடவேண்டும் என்பதே என் முடிவு.

K. கிருஷ்ணமூர்த்தி, (K. 561) திப்பிராஜபுரம்.

* * * *

உள்ளம் துள்ளுகிறது

ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம். கண்ணன் பத்திரிகை மாதமிரு முறையாக 3 அணு விலையில் வெளியிடலாம். விறுவிறுப்பும் அழகும் பொருந்திய 'ஜம்பு', 'குளிகைத் தீவு' இவைகளைப் பதினைந்து நாளைக்கு ஒருதரம் படிக்க என் உள்ளம் துள்ளுகிறது. அண்ணு, கண்ணன் கிடைத்ததும் அதிலுள்ள கதைகளை நான் படிப்பதற்குள் என் தம்பிகள், ஏன், என் பெற்றோர்கள்கூடப் போட்டி போடுகிறார்கள் என்றால்....? ஆகையால் இவ்வளவு அருமையான கண்ணனை மாதமிரு முறையாக்கும்படி அவர்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

—K. J. சேதுராமன் (S. 191) புதுக்கோட்டை.

* * * *

எது வேண்டும்?

அண்ணு,

வணக்கம். கண்ணன் இப்போது இருப்பதுபோலவே இருக்கலாமா அல்லது இரண்டணு, மூன்றணு விலையில் மாதம் இருமுறையாக இருக்கலாமா என்று கேட்டிருக்கிறீர்கள் நீங்கள் கேட்டுள்ள கேள்வி எப்படியிருக்கிறது, தெரியுமா? "ஒரு சத்புத்திரன் வேண்டுமா? அல்லது நூறு அசட்டுப் பிள்ளைகள் வேண்டுமா?" என்பதைப் போல இருக்கிறது. நறுமணமுள்ள ஒரு ரோஜாவினால் வீடு முழுவதும் சுகந்தம் வீசுமேயன்றி வாசமற்ற ஒரு குவியல் கனகாம்பரத்தால் அல்ல. வானில் பலகோடி நட்சத்திரங்கள் மின்னினாலும் ஒரு முழு

மதிக்கு ஈடாகுமா? .... அண்ணா! மேலும் சிறுவர்களாகிய எங்கள் உலகத்திலும் பொருளாதார நெருக்கடி உண்டு. கண்ணன் மாதம் ஓரிதழாக வருவதே மகிழ்ச்சி.

— T. S. ராதாபாய், (R. 297), சென்னை 14.

* * * *

கதை சொல்லுதல்

மயிலாப்பூர் கண்ணன் (பெண்கள்) கிளைக் கழகத்தில் கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய கதம்ப நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர் 'கதை சொல்லுதல்' என்னும் தலைப்பில் வெகு அழகாகவும் தெளிவாகவும் பேசினார். எஸ். ஜயலக்ஷ்மி வந்தனோபசாரம் கூறினாள்.

—உபதலைவி, கண்ணன் கிளைக் கழகம், மயிலாப்பூர்.

* * * *

மிட்டாய் கிடைத்தது

ஜாம்ஷெட்பூர் மதராஸி சம்மேளனியில் 23-3-52-இல் கண்ணன் கழகக் கூட்டம் ஸ்ரீ சி. ஆர். ஐயங்கார் தலைமையில் நடந்தது. உப தலைவர், செயலாளர், பொருளாளர் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீ வி. பி. சாரதி வெகு அழகாகப் பேசி, கடைசியில் குழந்தைகளுக்கு மிட்டாயும் கொடுத்தார்.

—R. நாகராஜன் (N. 236), உபதலைவர், ஜாம்ஷெட்பூர்.

* * * *

கறுப்பு, வெள்ளைக் கட்டம்



இதைப் பார்த்தால் சதுரங்கக் கட்டம் போல இருக்கும். நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? கீழே இடது புறத்திலுள்ள வெள்ளைக் கட்டத்திலிருந்து மேலே வலது புற வெள்ளைக் கட்டத்துக்குக் கோடு இழுக்கவேண்டும். ரொம்பச் சுலபமாச்சே என்று எண்ண

லாம். ஆனால் ஒரு வெள்ளைக் கட்டம் தாண்டினால் ஒரு கறுப்புக் கட்டத்துக்குத்தான் போகலாம். இப்படியே ஒன்று மாற்றி ஒன்றாக இருக்க வேண்டும். ஒரு நிபந்தனை என்னவென்றால் உங்கள் கோடு மேல் புறமோ கீழ்ப் புறமோ பக்கவாட்டிலோ போகலாம். ஆனால் குறுக்காகப் போகக் கூடாது. எங்கே, இப்பொழுது கோடு இழுங்கள், உங்கள் சாமர்த்தியத்தைப் பார்ப்போம்.

—மஞ்சுளா, (M. 706) பம்பாய், 19.

(விடை கடைசிப் பக்கத்தில்)

* * * *

பட்டப் பாட்டு

பட்டம் பறக்க விட்டிடலாம்
பார்த்து மகிழ்ந்து பாடிடலாம்
வர்ணக் காகிதம் வாங்கிடலாம்
வகையாய்ப் பட்டம் செய்திடலாம்
நீண்ட வாலும் வைத்திட்டே
நீள நூலும் முடிந்திட்டே
கையில் நூலைப் பிடித்திட்டே
கனவே கமுடன் விட்டிடலாம்.
வெட்டி வெட்டி இழுத்துவிட்டால்
வீசி வீசிப் பறக்கவிட்டால்
வானம் தொடவே போவதுபோல்
வானக மெனவே செல்லுது,பார்.
ஆற்று வெள்ளம் போவதுபோல்
அசைந்து அசைந்து அழகாக
அருமைப் பாப்பா அம்பியுடன்
ஆற்றங் கரையில் விடுவோமே.

—V. கீதா (G. 54)

* * * *

நான் யார்?

என் முதல் எழுத்து
ஒன்றிலுமுண்டு, ஒன்பதிலுமுண்டு.
என் இரண்டாம் எழுத்து
நாட்டிலும் உண்டு, காட்டிலும் உண்டு.
என் மூன்றும் எழுத்து
பட்டம், கட்டம் இரண்டிலும் உண்டு.
என் நான்காம் எழுத்து
துறைமுகத்திலும் உண்டு, கப்பலிலும் உண்டு.
என் ஐந்தாம் எழுத்து
மாம்பலம், தாம்பரம் இரண்டிலும் உண்டு.

—A. 342.

விடை: ஒட்டகம்

* * *

வணக்கம். ஐயம்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. கண்ணன் அங்கத்

தினர் அவருக்கு வரவேற்புரை வாசித்தளித்தார்கள். 'இன்ஸ்பெக்டர்' என்னும் நாடகத்தை மாணவர்கள் நடத்திக் காட்டினார்கள்.

—செயலாளர், கண்ணன் கிளைக் கழகம், ஐயம்பேட்டை.

* * * *

நான் நினைக்கிறேன்

சினிமாவில் தெரியும் பூவெல்லாம் அப்படியே வாசனையுடன் இருந்தால் என்ன?

—ராஜு, சபர்ஞ.

நான் தூங்கும்போது உலகத்தில் எல்லாருமே தூங்கிப் போய் விடவேண்டும்.

—கப்பு, மயிலாப்பூர்.

குற்றாலம் நீர்வீழ்ச்சி அப்படியே தேனாக இருந்தால் என்ன?

—காசிவிஸ்வநாதன், சங்கரன்கோயில்.

என் கண்கள் இரவில் டார்ச் லைட்டாக இருக்கவேண்டும்.

—முத்தம்மாள், கம்பளை.

* * *

உதகைப் பிரயாணம்

நாங்கள் கோடை விடுமுறைக்கு உதகமண்டலம் போவதாக இருந்தோம். மாலை ஐந்தரை மணிக்குப் புறப்பட்டு ஸ்டேஷனுக்குப் போனோம். ஆனால் மழை பிடித்துக்கொண்டு விட்டது. திரும்பி விட்டோம். மூன்று நாள் இடைவிடாமல் மழை பெய்தது. அதனால் பிரயாணம் போகவேயில்லை. எப்படி எங்கள் பிரயாணம்?

—சாமுவேல், நுங்கம்பாக்கம்.

* * * *

விடை: கறுப்பு, வெள்ளைக் கட்டம்



...நாடு ஆவணக் காப்பக நூலகம்
31783
சென்னை-600 008

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOF: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

9 வெங்களத்தூர்:
- உபதலைவர்: N. சுப்பிரமணியன்
- பொருளாளர்: D. சுப்பிரமணியன்
- செயலாளர்: M. சீனிவாசன்
- வாசகசாலை: நிர்வாகி } V. பலராமன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

10. சரபோஜிராஜபுரம்
- உபதலைவர்: T.V.சீதாராமன் (S.849)
- பொருளாளர்: R. கண்ணன்
- செயலாளர்: N. T. ராஜன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'பாரதி' என்னும் கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

11 கீழச்சிவல்பட்டி
- உபதலைவர்கள்: N. ராமசாமி, S. விசுவநாதன்.
- செயலாளர்: P. R. M. முத்தையா. M. M. கருப்பையா.
- பொருளாளர்கள்: K. R. வயிரவன். A. R. ராமசாமி.

ஒன்பது பேர் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. கையெழுத்துப் பத்திரிகை ஒன்று தயாராகி வருகிறது.

12. சங்ககிரி துர்க்கம், R. S.
- உபதலைவர்: S. M. பழனி (P. 5)
- செயலாளர்: S. P. லக்ஷ்மணன் (L. 92)
- பொருளாளர்: S. M. கோவிந்தம்மாள் (G. 77)

பத்துப் பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பேனா நண்பர்கள்

1. G. துரைசாமி, நரிக்கால்பட்டி, P. O. பழனி தாலுகா.
2. S. ராமமூர்த்தி, C/o R. சுப்பிரமணிய ஐயர், K. S. ராம ஐயர் காம்பவுண்டு, குல்லன் ரோடு, ஆலப்புழை.
3. நா. ஸ்ரீராம், C/o நாகமுத்து, ஊரிக்காடு, வெல்லவத்தை.
4. N. பாலகிருஷ்ணன், தேவி நிலையம், கூனூர்.
5. R. லட்சுமி, 164, லேன்ஸ் டௌன் தெரு, கல்கத்தா-29.
6. M. கிருஷ்ணன், 585. வார்கர் ரோடு, தைப்பிங் (மலேயா)
7. அழகு நாகப்பன், புதுவயல், ராமநாதபுரம் ஜில்லா.
8. S. சுந்தர், 56, செயின்ட் மேரீஸ் ரோடு, சென்னை - 18.
9. A. சுப்பராமன், பட்டி விநாயகர் பால் திரட் கம்பெனி, பெரிய கடை வீதி, திருப்பூர்.
10. P. வசந்தகுமாரன், 7/58, கிராஸ்கட் ரோடு, கோயம்புத்தூர்.
11. K. சங்கரன், 10/18, பொன்னுரங்கம் தெரு, R. S. புரம், கோயம்புத்தூர்.
12. P. ராகவேந்திரன், 30, வெங்கடாசல செட்டித் தெரு, சென்னை-5

REG. No. M. 5542

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்காக என்று திட்டமிட்டு நல்ல ஸ்வாரஸ்யமான கதைகளாகப் பொறுக்கிச் சேர்த்துச் சில புத்தகங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்தப் புத்தகங்களில் நிறையப் படங்களும் இருக்கின்றன. உங்கள் மனத்தைக் கவரும் கதைகள்; படங்கள்.

இப்போது தயாராக இருக்கும் புஸ்தகங்கள்:

1. **ராஜாவும் குருவியும்** "சோமசன்மா" அணா

ராஜாவும் குருவியும், ஆமையும் முயலும், காளையும் நாயும், நாயும் நிழலும், பிராம்மணனும் பொன் காப்பும், நரியும் திராட்சையும், சுண்டெலியும் சிங்கமும் என்ற ஏழு கதைகளின் தொகுதி.
இதே பெயரில் நீங்கள் படித்திருக்கும் பழைய கதைகளல்ல இவைகள். படித்துப் பாருங்கள்.

2. **கழுகும் கிளியும்** "சோமசன்மா" அணா 8

கழுகும் கிளியும், ஏமாறாத காக்காய், நண்டும் கொக்கும், புலித்தோல் போர்த்த கழுதை, குரங்கும் ஆப்பும், காக்கையின் தாகம், கழுதையும் நாயும் என்ற ஏழு புதுக் கதைகளின் தொகுதி.

3. **தவளையும் காளையும்** "சோமசன்மா" அணா 8

தவளையும் காளையும், நாவல் மரத்துக் குரங்கு, கூடா நட்பு, ஓநாயும் ஆட்டுக் குட்டியும், குரங்கு நியாயம் என்ற ஐந்து புதிய கதைகள்.

4. **கோழி விதைத்த நெல்** "சூடாமணி" அணா 3

பாட்டாகப் பாடும் கதை.

5. **தங்கத்தின் பந்து** "சூடாமணி" அணா 3

தங்கத்தின் பந்து, சண்டை போட்ட நாய்க்குட்டிகள், காட்டுப்பூனையும் குழந்தையும் என்ற மூன்று கதைகள்.

6. **என் பேர் என்ன?** "சூடாமணி" அணா 3

பாட்டுக்கதை.

கண்ணன் அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு.